## தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை - 2019

---

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் (''சபை'') இன் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு சபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன்

தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- சபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- சபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமத்துடன் இணங்காமை

| | உரிய நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல் தொடர்பான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் (எல்கேஏஎஸ் 01) 32 ஆம் பிரிவிற்கு முரணாக மீளாய்வாண்டின் இறுதியில் நடைமுறைச் சொத்துக்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 9,772,912 தொகையான வியாபார பெறவேண்டியவைகள் | கைகள் மூலமான பதிதல் முறைமை கணனிமயப்படுத்தப்பட்டதன் காரணமாக இம் மீதிகள் 1999 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து வருகின்றன. | நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது இலங்கை கணக்கீட்டு நியமம் 01 (எல்கேஏஎஸ் 01) உடன் இணங்குவதை உறுதிப்படுத்துதல். |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் கடன்பட்டோர் சேகரிப்பு கட்டுப்பாட்டுக் கணக்கின் செலவு மீதியொன்று செலுத்த வேண்டியவைகளிற்கு எதிராக எதிரீடு செய்யப்பட்டிருந்ததுடன் நிதி நிலைமைக் கூற்றில் செயற்பாடற்ற பொறுப்புக்களாக இனங்காணப்பட்டிருந்தன. அதே போல் மீளாய்வாண்டின் இறுதியில் நடைமுறைப் பொறுப்புக்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 1,078,112 தொகையான பெறப்பட்ட பிடித்துவைத்தல் வரவு மீதியொன்று பெறவேண்டியவைகளிற்கு எதிராக எதிரீடு செய்யப்பட்டிருந்ததுடன் நிதி நிலைமைக் கூற்றில் செயற்பாடற்ற சொத்துக்களாக இனங்காணப்பட்டிருந்தன. மேலும் மானியங்களாக பெறப்பட்ட கணனி மென்பொருள் தொடர்பான ரூபா 1,043,784 தொகையான பெறுமானத்தேய்வு மற்றும் பிற்போடப்பட்ட வருமானம் நிதிக் கூற்றுக்களில் தனித்தனியாக காட்டப்படாமல் ஒன்றுக்கொன்று எதிரீடு செய்யப்பட்டிருந்தன. | | |
| (ii) | காசுப்பாய்ச்சல் கூற்று தொடர்பான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் (எல்கேஏஎஸ் 07) 07 ஆம் பிரிவிற்கு முரணாக சேமிப்புக் கணக்கொன்றில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,361,683 தொகையான வைப்பொன்று நடைமுறையல்லாச் சொத்துக்களின் கீழ் வகைப்படுத்தப்பட்டிருந்தது. | இவ் வைப்பை குறுங்கால தொழிற்பாட்டில் பயன்படுத்தும் நோக்கத்துடன் இது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை . ஆகையால் இது காசுப்பாய்ச்சலில் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து தவிர்க்கப்பட முடியும். | நடைமுறை மற்றும் நடைமுறையல்லாதவையாக சொத்துக்களை வகைப்படுத்தும் போது இலங்கை கணக்கீட்டு நியமம் 07 - (எல்கேஏஎஸ் 07) உடன் இணங்குவதை உறுதிப்படுத்துதல். |
| (iii) | ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் தொடர்பான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் (எல்கேஏஎஸ் 16) 51 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் ஆகக் குறைந்தது ஒவ்வொரு நிதியாண்டு இறுதியிலும் மீளாய்வு செய்யப்பட்டு முன்னைய | நாடு முழுவதும் பரந்துள்ள மிகப்பரந்த சொத்து அடிப்படையொன்று காணப்படுவதால் என்டபிள்யூஎஸ்டிபீ இன் சொத்து அடிப்படையை பெறுமதியிடுவது நடைமுறைச் சாத்தியமற்றதாக காணப்படுகின்றது. | சபையால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட சொத்துக்களின் பயன்தரு பொருளாதார ஆயுட்காலத்தை மீள மதிப்பீடு செய்தல் தொடர்பாக இலங்கை கணக்கீட்டு நியமம் 16 |

| | | | |
|---|---|---|---|
| | மதிப்பீடுகளிலிருந்து எதிர்பார்ப்புக்கள் வேறுபட்டால் எல்கேஏஎஸ் 08 இன் பிரகாரம் மாற்றங்கள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். எனினும் தற்போதும் பயன்பாட்டிலுள்ள ரூபா 1,813,275,339 தொகையான முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதற்கிணங்க கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | (எல்கேஏஎஸ் 16) உடன் இணங்குவதை உறுதிப்படுத்துதல். |
| (iv) | ஊழியர் நலன்கள் தொடர்பான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் (எல்கேஏஎஸ் 19) 66 மற்றும் 144 ஆம் பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது ஊழியத்தின் பின்னரான நலன் கடப்பாடு மற்றும் தொடர்புபட்ட நடைமுறை சேவை கிரயம் என்பவற்றின் தற்போதைய பெறுமதியை அளவிடும் பொருட்டு சபையானது உண்மையான பெறுமதி கணிப்பீட்டு முறையொன்றை பயன்படுத்தியிருக்காததுடன் எந்தவொரு உண்மையான எடுகோள்களும் மேற்கொள்ளப்பட்டு அவை வெளிப்படுத்தப்பட்டிருக்காதமை கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டிருந்தது. மேலும் ஓய்வூதிய நலன் கடப்பாட்டிற்கான ஏற்பாடு (பணிக்கொடை ஏற்பாடு) நியமத்தின் 58 ஆம் பந்தியின் தேவைப்பாடுகளின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் போது பணிக்கொடையாக (செயற்திட்டப் பதவியணி தவிர்ந்த) செலுத்தப்பட்ட ரூபா 578,942,828 இற்குச் சமமான தொகையொன்று மீளாய்வாண்டின் ஏற்பாடாக இனங்காணப்பட்டிருந்தது. | ஒவ்வொரு மூன்று ஆண்டுகளிலும் நிபுணரொருவரின் சேவையை பெற்றுக்கொள்வதன் மூலம் சபையில் உண்மையாக மேற்கொள்ளப்படுகின்றது. ஆண்டின் போது செலுத்தப்பட்ட பணிக்கொடை ஆண்டிற்கான ஏற்பாடாகவும் செலவினமொன்றாகவும் எடுக்கப்பட்டிருந்தது. | ஊழியர் நலன் கடப்பாடுகளை இனங்கண்டு உரிய வெளிப்படுத்தல்களை மேற்கொள்வது தொடர்பாக இலங்கை கணக்கீட்டு நியமம் 19 (எல்கேஏஎஸ் 19) உடன் இணங்குவதை உறுதிப்படுத்துதல். |

| | | | |
|---|---|---|---|
| (v) | அரசாங்க மானியத்திற்கான கணக்கீடு மற்றும் அரசாங்க உதவியை வெளிப்படுத்துதல் தொடர்பான இலங்கை கணக்கீட்டு நியமத்திலுள்ள (எல்கேஏஎஸ் 20) ஏற்பாடுகளிற்கு முரணாக 8 முதல் 12 ஆண்டுகளிற்கு மேலாக காலக்கழிவிடப்படாமல் மாற்றமடையாதிருந்த 34 செயற்திட்டங்கள் தொடர்பான ரூபா 14,697.25 மில்லியன் கூட்டுமொத்தமான வெளிநாட்டு மானிய மீதிகள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருந்தது. அவ் வெளிநாட்டு மானியங்களிற்குரிய தகவல்கள் எதுவும் கிடைக்கப்பெறாததால் நிதிக்கூற்றுக்களிற்கான காலக்கழிவடப்படாதமை தொடர்பான தாக்கத்தை கணக்காய்வின் போது மதிப்பிட முடியாதிருந்தது. | காணிகள் உள்ளடங்கிய பெறுமானத்தேய்விடப்படாத சொத்துக்களிற்குரிய மானியங்கள் காலப்பகுதி முழுவதும் பெறுமானத்தேய்விடப்படாமல் காணப்பட்டதுடன் நிலவிய கட்டிடங்களின் ஆயுட்காலம் 50 ஆண்டுகளிற்கு மேற்பட்டிருந்தது. உரிய மானியங்கள் அக் காலப்பகுதி வரை பெறுமானத்தேய்விடப்பட்டிருந்தன. | வெளிநாட்டு மானியங்களின் காலக்கழிவு தொடர்பாக இலங்கை கணக்கீட்டு நியமத்துடன் (எல்கேஏஎஸ் 20) இணங்குவதை உறுதிப்படுத்துதல். |
| (vi) | அந்நிய செலாவணி விகிதங்களிலுள்ள மாற்றங்களின் தாக்கங்கள் தொடர்பான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் (எல்கேஏஎஸ் 21) 23(அ) பந்திக்கு முரணாக சபையானது மீளாய்வாண்டின் இறுதியிலுள்ள இறுதி விகிதத்தை பயன்படுத்தி ஐ.அ.டொலர் 84,176,147 கூட்டுத்தொகையான ஐந்து (05) ஐ.அ.டொலர் நிலையான வைப்புக்களின் பெறுமதியை ரூபாவிற்கு மாற்றியிருக்கவில்லை. ஆகையால் நிதிக்கூற்றுக்களிலுள்ள நிலையான வைப்புக்களின் பெறுமதி ஏறத்தாழ ரூபா 159.09 மில்லியன் தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. மேலும் நியமத்தின் 28 ஆம் பந்தியின் பிரகாரம் பணரீதியான விடயங்களை மாற்றுவது தொடர்பாக ஏற்பட்ட செலாவணி வேறுபாடு நிதிக்கூற்றுக்களில் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | நிதிச் சொத்துக்களின் ஆரம்ப அங்கீகாரம் மீது கொடுக்கல் வாங்கல் திகதியில் தொழிற்பாட்டு நாணத்திற்கும் வெளிநாட்டு நாணயத்திற்கும் இடையேயான குறித்த நேர (spot) செலாவணி விகிதம் மூலம் வெளிநாட்டு நாணயத் தொகைக்கு குறித்த நேர செலாவணி விகிதத்தை பிரயோகிப்பதன் மூலம் பதிவு செய்யப்பட்டிருந்தது. | வெளிநாட்டு நாணய பண ரீதியான விடயங்களை பதிவு செய்வது தொடர்பாக இலங்கை கணக்கீட்டு நியமம் 21 (எல்கேஏஎஸ் 21) உடன் இணங்குவதை உறுதிப்படுத்துதல். |

| | | | |
|---|---|---|---|
| (vii) | முதலீட்டு ஆதனம் தொடர்பாக இலங்கை கணக்கீட்டு நியமத்திலுள்ள (எல்கேஏஎஸ் 40) ஏற்பாடுகளிற்கு முரணாக, ரூபா 337,781,741 தொகையான முதலீட்டு ஆதனத்தின் கொண்டுசெல்லும் பெறுமதி 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முதலீட்டு ஆதனமாக காண்பிக்கப்படுவதற்குப் பதிலாக ஆதனம், பொறி மற்றும் உபகரணமாக காட்டப்பட்டிருந்தது. மேலும், நியமத்தின் 75(ஊ)(i) மற்றும் 79 ஆம் பந்தியின் பிரகாரம், முதலீட்டு ஆதனத்திலிருந்தான வருமானம் வெளிப்படுத்தப்பட்டிருக்காததுடன் பெறுமானத் தேய்வு முறைகள், பயன்தரு ஆயுட்காலம் அல்லது பெறுமானத்தேய்வு விகிதங்கள், காலப்பகுதியின் ஆரம்பம் மற்றும் இறுதியில் மொத்த கொண்டுசெல்லும் தொகை மற்றும் திரண்ட பெறுமானத்தேய்வு மற்றும் நட்டக்கழிவு தொகை என்பன தொடர்பில் முறையான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எல்கேஏஎஸ் 40 இன் 14 ஆம் பந்தியின் பிரகாரம் நீர் வழங்கல் அமைச்சால் தற்போது குடியிருக்கப்படும் கட்டிடம் முதலீட்டு ஆதனமாக இனங்காணப்படுதற்கு தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. ஆகையால் மேற்படி நியமத்தின் 75(இ) பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் அத்தகைய சீராக்கம் தேவைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | முதலீட்டு ஆதனத்தை இனங்காணுதல் தொடர்பாக இலங்கை கணக்கீட்டு நியமத்துடன் (எல்கேஏஎஸ் 40) இணங்குவதை உறுதிப்படுத்துதல். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | களுத்துறை பிராந்தியத்தில் ரூபா 2,549,787 தொகையான நான்கு ஆண்டுகளிற்கு முன்னர் திருடப்பட்ட இருப்புக்கள் உரிய உத்தியோகத்தர்களிடமிருந்து அத்தகைய நட்டங்கள் அறவீடு செய்யப்படாமல் 2019 திசெம்பர 31 இல் உள்ளவாறு பொருளிருப்பு பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருந்தன. | மேற்கொள்ளப்படுகின்ற விசாணை இறுதியாக்கப்படும் போது கணக்குப் புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்குப் புத்தகங்களிலிருந்து அத்தகைய இருப்பு மீதிகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் பொறுப்பான உத்தியோகத்தர்களிடமிருந்து நட்டங்களை அறவீடு செய்வதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | 2015 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையயாய்வின் போது குருணாகல் பிராந்திய அலுவலகத்தில் 16 நீர் வழங்கல் திட்டங்கள் தொடர்பாக ரூபா 65,852,393 | கணக்குப் புத்தகங்களிலிருந்து இப் பயன்படுத்தப்பட முடியாத ரூபா 65,852,393 தொகையான சொத்துக்களை | பயன்படுத்தப்பட முடியாத சொத்துக்களை அகற்றுவதற்கும் கணக்குப் புத்தகங்களிலிருந்து |

| | | | |
|---|---|---|---|
| | கூட்டுமொத்த பெறுமதியான நிலையான சொத்துக்கள் பயன்படுத்தப்பட முடியாத நிலையில் நீண்ட காலமாக காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. எனினும் கணக்குப் புத்தகங்களிலிருந்து அவற்றை அகற்றுவதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதிவழிப்பதற்கு சபை அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு சபைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | அவற்றை அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான புதிய இணைப்பு கடன்பட்டோர் உள்ளடங்கலாக வியாபார கடன்பட்டோர் மீதி ரூபா 4,866,811,132 ஆக காணப்பட்டது. எவ்வாறாயினும், ரூபா 4,728,910,812 தொகையான கடன்பட்டோருக்காக மாத்திரம் நட்டக் கழிவிற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. ஆகையால் ரூபா 137,900,320 கூட்டுத்தொகையான கடன்பட்டோருக்காக எவ்வித ஏற்பாடும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நட்டக்கழிவு கணிப்பீடானது வணிக முறைமை மூலம் வழங்கப்பட்ட உள்ளபடியான தொகைகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்றது. | கடன்பட்டோருக்கான நட்டக்கழிவு ஏற்பாடுகளின் சரியான தன்மை உறுதிப்படுதப்படுதல். |
| (iv) | ஏடிபீ (iv) செயற்திட்டம் பூர்த்தியடைந்ததும் ரூபா 106,835,381 பெறுமதியான சுத்திகரிப்பு பொறி, நீர்த்தேக்க மற்றும் மூல நீர் உள்ளீர்ப்பிற்கான மின்சார வழங்கலிற்காக நிறுவப்பட்ட மூன்று மின்மாற்றிகள் சபைக்கு மாற்றப்பட்டிருந்த போதிலும் சொத்துக்களின் பெறுமதி ஆண்டிறுதியில் நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறையல்லாச் சொத்துக்களாக காட்டப்படுவதற்குப் பதிலாக வேலை ஆரம்பித்தல் மற்றும் ஏனைய முற்பணங்களாக காட்டப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது மேற்படி சொத்துக்களிற்காக பெறுமானத்தேய்விற்கான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இது இலங்கை மின்சார சபைக்கு குறித்த பிராந்தியம் மூலம் மேற்கொள்ளப்பட்ட மின்சார வைப்பு தொடர்பானதாகும். | கணக்குப் புத்தகங்களில் பதிவுசெய்யப்பட்ட நிலையான சொத்துக்களின் சரியான தன்மை மற்றும் பூரணத் தன்மையை உறுதிப்படுத்துதல். |
| (v) | அம்பாறை பிராந்திய அலுவலகத்தின் பௌதீக மெய்மையாய்வின் பிரகாரம், மஹா ஓயா, சம்மாந்துறை, உஹன மற்றும் கொண்டுவட்டுவான கிரய நிலையங்கள் தொடர்பாக ரூபா 3,596,600 கூட்டுமொத்தப் பெறுமதியுடைய கட்டிடங்கள், கட்டமைப்புக்கள் மற்றும் பொறி மற்றும் உபகரணம் பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டிருந்ததுடன் ரூபா 7,088,478 பெறுமதியான கட்டமைப்புக்கள் இடித்தழிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. எனினும் அத்தகைய சொத்துக்களை அகற்றுவதற்கு எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படாமல் மீளாய்வாண்டின் போது ரூபா 212,914 பெறுமானத்தேய்வு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | ரூபா 7,088,478 பெறுமதியான பொறி அகற்றப்பட்டிருந்ததுடன் சபைப் பத்திரமொன்றின் ஊடாக இச் சொத்தை அகற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | கணக்குப் புத்தகங்களில் பதிவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்களின் சரியான தன்மை, பூரணத் தன்மை மற்றும் இருக்கும் தன்மை உறுதிப்படுத்தப்படுதல். |

| | | | |
|---|---|---|---|
| (vi) | அம்பாறை பிராந்திய அலுவலகத்தின் பௌதீக மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம், ரூபா 46,361,081 கூட்டுமொத்தப் பெறுமதியான சொத்துக்கள் பௌதீக ரீதியாக காணப்படவில்லை. எனினும் மீளாய்வாண்டின் போது ரூபா 946,602 பெறுமானத்தேய்வு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | விபரமான விளக்கங்களின் பிரகாரம் பந்தியுடன் இணங்கப்படுகின்றது. | கணக்குப் புத்தகங்களில் பதிவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்களின் சரியான தன்மை, பூரணத் தன்மை மற்றும் இருக்கும் தன்மை உறுதிப்படுத்தப்படுதல். |
| (vii) | 2017 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 65,383,426 தொகையான பொருளாதார சேவைக் கட்டணங்கள் (ஈஎஸ்சீ) மீளாய்வாண்டிற்கான உள்ளபடியான வருமான வரிச் செலவினத்தை இனங்காணும் பொருட்டு விபரமான வருமான வரி கணிப்பீடு மேற்கொள்ளப்படாமல் மிளாய்வாண்டின் விரிவான வருமானக் கூற்றில் வருமான வரிச் செலவினமாக தவறுதலாக இனங்காணப்பட்டிருந்தது. | பொருளாதார சேவைக் கட்டணம் (ஈஎஸ்சீ) விரிவான வருமானக் கூற்றில் செலவினமாக தெளிவாக குறிப்பிடப்பட்டிருந்தது. | விரிவான வருமானக் கூற்றில் வருமான வரிச் செலவினங்களின் சரியான தன்மையை உறுதிப்படுத்துதல். |
| (viii) | பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், ரூபா 1,133,341,195 தொகையான பூர்த்திசெய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட ஐம்பத்து ஐந்து (55) நீர் வழங்கல் மற்றும் புனரமைப்புச் செயற்திட்டங்கள் மூலதனமாக்கப்படாமல் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நடைபெறும் வேலையில் காணப்பட்டிருந்தது. மேலும் மீள்நிரப்பத்தக்க வேலைகளிற்காக பெறப்பட்ட முற்பணங்களில் களுத்துறை பிராந்தியம் மற்றும் மேல் மத்திய பிராந்தியங்களில் உள்ள 05 செயற்திட்டங்களிற்குரிய ரூபா 12,617,859 தொகை ஏற்கனவே பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் 2020 யூன் 30 வரையிலும் உரிய வருமானக் கணக்கிற்கு இது எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டப் பணிப்பாளர் மூலதனமாக்குவதற்கு சொத்துப் படிவத்தை அனுப்ப வேண்டியுள்ளது. மேலும் மீள்நிரப்பத்தக்க செயற்திட்டங்களின் விடயத்தில் உறுதிப்படுத்தல் பூர்த்தி செய்யப்பட்டதும் இம் மீதிகளை தீர்வு செய்வதற்குரிய பதிவுகள் மேற்கொள்ளப்படும். | பூர்த்தி செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட நீர் வழங்கல் மற்றும் புனரமைப்புச் செயற்திட்டங்களை மூலதனமாக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதுடன் செயற்திட்டங்கள் பூர்த்தியடைந்ததும் உரிய வருமானக் கணக்கிற்கு மீள்நிரப்பத்தக்க வேலைகளிற்காக பெறப்பட்ட முற்பணங்கள் செலவு வைக்கப்பட வேண்டும். |
| (ix) | 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் நிதிக்கூற்றுக்களில் 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளிற்குரியதான முன்னைய ஆண்டுச் சீராக்கங்களை சபை மேற்கொண்டிருந்ததன் விளைவாக 2018 ஆம் ஆண்டின் இறுதியில் நிறுத்தி வைக்கப்பட்ட நட்டம் ரூபா 117.96 மில்லியனால் தவறாக காட்டப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. ஆகையால் எதிர்வரும் ஆண்டில் மீளாய்வாண்டிற்கான இலாபத்திற்கு சீராக்கங்களை மேற்கொள்வதற்கான சாத்தியத்தன்மையை கணக்காய்வில் குறிப்பிட முடியாதிருந்தது. | எல்கேஏஎஸ் 8 இன் பிரகாரம் முன்னைய காலப்பகுதி தவறுகளை சீர்செய்வதற்கு ஒழுங்குமுறை தேவைப்பாடு காணப்படுகின்ற போதிலும் முன்னைய காலப்பகுதிகளிற்கு மேற்கொள்ளப்பட்ட சீராக்கம் 2019 ஆம் ஆண்டில் ரூபா 100,836,158 வரை குறைவடைந்திருந்தது. | வழமையொன்றாக முன்னைய ஆண்டுச் சீராக்கத்தை மேற்கொள்வதன் மூலம் இலாபங்கள் தவறாக காட்டப்படுவதை தவிர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட அத்தனைய முன்னைய ஆண்டு சீராக்கங்களின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| ஆண்டு | வரவு வைக்கப்பட்ட தொகை | செலவு வைக்கப்பட்ட தொகை | திரண்ட இலாபத்திற்கான தேறிய விளைவு |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| 2018 | 8,086,792 | 108,922,950 | 100,836,158 |
| 2017 | 18,821,712 | 140,160,044 | 121,338,332 |
| 2016 | 243,896,877 | 139,680,704 | (104,216,173) |

| | | | |
|---|---|---|---|
| (x) | ஏழு (07) செயற்திட்டங்கள் தொடர்பாக நடைபெறும் வேலையின் கீழ் காட்டப்பட்ட ரூபா 198,729,791 கூட்டுமொத்தமான மீதிகள் நிதிக்கூற்றுக்களில் தேவையான சீராக்கங்களை மேற்கொள்ளும் பொருட்டு புலனாய்வு செய்யப்படாமல் பத்து ஆண்டுகளிற்கு மேலாக மாற்றமடையாதிருந்தன. | செயற்திட்டப் பணிப்பாளர் மூலதனமாக்குவதற்கு சொத்துப் படிவத்தை அனுப்ப வேண்டியுள்ளது. | பூர்த்தி செய்யப்பட்டு அங்கிகரிக்கப்பட்ட நீர் வழங்கல் மற்றும் புனரமைப்பு செயற்திட்டங்களை மூலதனமாக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (xi) | மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் பிரகாரம் மூன்று (03) நிலையான வைப்புக்கள் தொடர்பாக பெறப்பட்ட ரூபா 15,302,077 தொகையான வட்டி வருமானம் மற்றும் அது தொடர்பாக கழிக்கப்பட்ட ரூபா 1,125,718 தொகையான பிடித்து வைத்தல் வரி என்பன கணக்கீடு செய்யப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. மேலும் ஐ.அ.டொலர் 91,395.37 தொகையான மூன்று (03) ஐ.அ.டொலர் வைப்புக்கள் மீது பெறப்பட்ட வட்டி ரூபாவிற்கு மாற்றப்படுவதற்குப் பதிலாக டொலரிலேயே நிதிக்கூற்றுக்களில் பதிவு செய்யப்பட்டிருந்தன. ஆகையால் வட்டி வருமானம், பெறவேண்டிய பிடித்துவைத்தல் வரி மற்றும் வங்கி மீதிகள் முறையே ரூபா 15,619,025, ரூபா 780,502 மற்றும் ரூபா 14,838,523 தொகைகளால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன. அத்துடன் நான்கு (04) ஐ.அ.டொலர் வைப்புக்கள் தொடர்பான ரூபா 137 மில்லியன் அட்டுறு வட்டி வருமானமும் கணக்குப் புத்தகங்களில் பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை. இதற்கு மேலதிகமாக 2019 நவம்பர் 08 தொடக்கம் 2019 திசெம்பர் 08 வரையான காலப்பகுதிக்காக இன்னொரு வைப்புக் கணக்கு மீது பெறப்பட்ட ரூபா 3,457,862 தொகையான வட்டி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டில் இவ் வட்டிகள் சீர்செய்யப்படும். | நிலையான வைப்புக்கள் மீதான வட்டி வருமானம் தொடர்பாக உரிய சீராக்கல் பதிவுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (xii) | ரூபா 1,130,959 தொகையான இன்னொரு நிலையான வைப்பு மீதான அட்டுறு வட்டி வருமானம் இரு தடவை கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 352,247 தொகையான இன்னொரு நிலையான வைப்பு மீதான அட்டுறு வட்டி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டின் போது திருத்தப் பதிவு மேற்கொள்ளப்படும். | நிலையான வைப்புக்கள் மீதான அட்டுறு வட்டி வருமானம் தொடர்பாக உரிய திருத்தப் பதிவுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (xiii) | ரூபா 71,040,247 தொகையான பீஓசீ நிலையான வைப்புக்கள் மீது பெறவேண்டிய வட்டி வருமானத்தின் ஆரம்ப மீதியில் ரூபா 49,702,919 தொகை மாத்திரம் மீளாய்வாண்டின் போது அறவீடு செய்யப்பட்டிருந்தது. ஆகையால் ரூபா 21,337,328 மிகுதியாகவுள்ள மீதி மீளாய்வாண்டின் போது முறையாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இது 2020 ஆம் ஆண்டில் சீர்செய்யப்படும். | மீளாய்வாண்டின் போது பெறவேண்டிய வட்டியின் ஆரம்ப மீதிகளை தீர்ப்பதற்கு அதனாலேயே நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (xiv) | இரண்டு (02) வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்கள் மற்றும் மூன்று (03) உள்நாட்டு வங்கிச் செயற்திட்டங்களின் நிலுவைக் கடன் மீதி தொடர்பாக வங்கிகளிடமிருந்து பெறப்பட்ட உறுதிப்படுத்தலை நிதிக்கூற்றுக்களிலுள்ள மீதிகளுடன் ஒப்பிடும் போது நிதிக்கூற்றுக்களின் பிரகாரமான நிலுவைக் கடன் மீதி ரூபா 292,455,446 தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் ஒன்பது (09) உள்நாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களின் கடன்கள் மீதான அட்டுறு வட்டி தொடர்பாக வங்கிகளிடமிருந்து பெறப்பட்ட உறுதிப்படுத்தல்களை ஒப்பிடும் போது ரூபா 7,558,250 மேலதிக நிதியேற்பாடொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | **பொதி iii, அம்பாறை, கொழும்பு நகரம், 22 செயற்திட்டங்கள், மிதிரிகிரிய**<br>2019 ஆம் ஆண்டில் அதிகரிக்கப்பட வேண்டியிருந்த விலைச்சிட்டை 2020 சனவரியில் அதிகரிக்கப்பட்டிருந்ததன் காரணமாக ரூபா 419,100 வேறுபாடு காணப்படுகின்றது.<br><br>**அம்பாறை மாவட்ட விநியோக வலையமைப்பு டபிள்யூஎஸ்பி**<br>2020 சனவரியில் விலைச்சிட்டை அதிகரிக்கப்பட்டதன் காரணமாக ரூபா 1,058,700 வேறுபாடு காணப்படுகின்றது.<br><br>**லக்கல புதிய நகர நீர் வழங்கல் செயற்திட்டம்**<br>வங்கியால் கடன் நிலுவை மீதிக்கு செலுத்த வேண்டிய வட்டித் தொகை சேர்க்கப்பட்டதன் காரணமாக இது காணப்படுகின்றது.<br><br>**அளுத்கம, மதுகம, அகலவத்தை நீர் வழங்கல் செயற்திட்டம்**<br>நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதியை கணிப்பீடு செய்யும் போது பீஓசீ மற்றும் இந்திய ஏற்றுமதி இறக்குமதி | ஆண்டிறுதிக் கடன் மீதிகள் மற்றும் அவற்றின் மீதான அட்டுறு வட்டிகளின் கணிப்பீட்டின் சரியான தன்மையை உறுதிப்படுத்துதல். |

| | | | |
|---|---|---|---|
| | | வங்கி பெறுமதி இரண்டையும் கணக்காய்வு தவறுதலாக ஒன்றாக சேர்த்திருந்தது.<br><br>**ஹெம்மத்தகம நீர் வழங்கல் செயற்திட்டம்**<br>நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி ரூபா 3,875,023,311 ஆக காணப்படுகின்றதுடன் வங்கி ரூபா 3,772,862,944 இனை உறுதிப்படுத்தியிருந்தது. மேலும் தற்போதுள்ள பதிவேட்டின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டிற்கான அட்டுறுவாக இருக்க வேண்டிய கடன் வட்டி ரூபா 2,459,661,806 ஆகும். | |
| (xv) | 02/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் வரிசை அமைச்சு செயலாளரின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் பணிப்பாளர் சபையால் மன்னார் மாவட்டத்தில் ரூபா 758,840 தொகையான வியாபார கடன்பட்டோர் மீதியொன்று பதிவழிக்கப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் அத் தொகை வியாபார கடன்பட்டோரிற்குப் பதிலாக மானி விற்பனைக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | 102 தொடக்கம் 108 வரையான நிதிப்பிரமாண பிரிவின் பிரகாரம் சபை அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதன் மூலம் வியாபாரம் தொடர்புபட்ட நட்டங்கள் பதிவழிக்கப்பட முடிந்திருந்தது. | அரச நிதிச் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகள் கடுமையாக பின்பற்றப்பட வேண்டியதுடன் அதற்கிணங்க திருத்தப் பதிவு மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (xvi) | முன்னைய ஆண்டுகளின் போது தொங்கல் கணக்கொன்றிற்கு மாற்றப்பட்டிருந்த ஏனைய கடன்பட்டோர், முற்பணங்கள், வியாபார கடன்கொடுத்தோர், உரிமைகோரப்படாத சம்பளங்கள் போன்றவற்றை உள்ளடக்கிய ரூபா 149,681,812 மற்றும் ரூபா 72,141,419 தொகையான முறையே சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் நீண்டகால நிலுவை மீதிகள் மீளாய்வாண்டின் போது உரிய கணக்குகளிற்கு அறவிடப்பட்டிருந்ததுடன் அம் மீதிகள் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் செயற்பாடற்ற சொத்துக்கள் மற்றும் செயற்பாடற்ற பொறுப்புக்களாக இனங்காணப்பட்டிருந்தன. மேலும் ரூபா 95,796,513 இனங்காணப்படாத மீதி மற்றும் ரூபா 5,906,882 வங்கி மீதிகள் புலனாய்வு செய்து தீர்ப்பனவு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் செயற்பாடற்ற சொத்துக்களாக மேற்குறிப்பிடப்பட்ட மீதியில் காணப்பட்டன. | கைகள் மூலமான பதிவுசெய்தல் முறைமை கணனிமயப்படுத்தப்பட்டதன் காரணமாக 1999 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து வருகின்றன. | செயற்பாடற்ற சொத்து மற்றும் பொறுப்பு மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது ஏடுகள்

| | கணக்காய்வு விடய விபரங்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | வவுனியா, மட்டக்களப்பு, களுத்துறை, பாணந்துறை பிராந்திய அலுவலகங்கள், பிராந்திய உதவி நிலையம் (சப்ரகமுவ) ஆகியவற்றின் நிலையான சொத்துப் பதிவேடுகளிற்கும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட அதற்கு நேரொத்த பட்டோலைகளிற்கும் இடையில் ஆதனம், பொறி உபகரணங்களின் பெறுமதியில் காணப்பட்ட ரூபா 105,427,971 கூட்டுமொத்தமான வேறுபாடு காரணமாக இறையில் ஆதன காணி, இறையில் ஆதன கட்டிடம் மற்றும் பாகப்பிரிவினைகள் போன்ற நிலையான சொத்துக்களின் மூன்று (03) உருப்படிகளின் சரியான தன்மை மற்றும் முழுமைத் தன்மையானது கணக்காய்வின் போது மதிப்பிடப்பட முடியாதிருந்தன. | **சப்ரகமுவ பிராந்தியம்**<br>காணி கொள்வனவு பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. ஆகையால் அவை சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. ஆனால் என்டபிள்யூஎஸ்டிபீயில் இக் காணிகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஆகையால் இது காணிகளாக நிதிக்கூற்றில் காட்டப்பட்டுள்ளது.<br><br>**பாணந்துறை**<br>தேவையான ஆவணங்கள் பெற்றுக் கொள்ளப்பட்ட பின்னர் இது சொத்துப் பதிவேட்டிற்கு எடுக்கப்படும்.<br><br>**களுத்துறை**<br>வேறுபாடுகள் 2020 ஆம் ஆண்டில் திருத்தம் செய்யப்படும்.<br><br>**மட்டக்களப்பு**<br>ரூபா 4,896,791 வேறுபாடு 2020 ஆம் ஆண்டில் தீர்ப்பனவு செய்யப்படும். | நிலையான சொத்துப் பதிவேடுகள் மற்றும் அதற்கு நேரொத்த பட்டியல்கள் இணக்கம் செய்யப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | பின்வரும் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.<br><br>**(அ) வியாபார கடன்பட்டோர் (ரூபா)**<br>நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 4,707,186,657<br>வயதுப் பகுப்பாய்வின் பிரகாரம் 4,567,497,570<br>வேறுபாடு 139,689,087<br><br>**(ஆ) புதிய இணைப்புக் கடன்பட்டோர் (ரூபா)**<br>நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 159,624,475<br>வயதுப் பகுப்பாய்வின் பிரகாரம் 63,934,575<br>வேறுபாடு 95,689,900<br><br>**(இ) மானி விற்பனைகள் மற்றும் மொத்த விற்பனைகள் (ரூபா)**<br>நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 23,995,638,648<br>எம்ஜஎஸ் அறிக்கைகளின் பிரகாரம் 23,846,150,000<br>வேறுபாடு 149,488,648 | (அ) மற்றும் (ஆ) வணிக முறைமை மற்றும் பொதுப் பதிவேட்டு முறைமை என்பவற்றிற்கிடையே வேறுபாடு காணப்படுகின்றது.<br><br>(இ) வணிகப் பிரிவின் மூலம் மதிப்பிடப்பட்ட தொகைகள் மற்றும் உள்ளபடியான தொகைகள் வழங்கப்பட்டதன் காரணமாக வேறுபாடு காணப்படுகின்றது. | நிதிக்கூற்றுக்களிலுள்ள மீதிகள் அதற்கு நேரொத்த பட்டியல்களுடன் இணக்கம் செய்யப்படுதல். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் பிரகாரம் சபையின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட நடைமுறை வேலை மீதிக்கும் நான்கு வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களின் தனிப்பட்ட நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட நேரொத்த மீதிகளிற்கும் இடையே ரூபா 431.5 மில்லியன் கூட்டுமொத்தமான வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | பின்னிணைப்புக்கள் ஊடாக கணக்கிணக்கங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | அதன் கீழ் குறிப்பிடப்பட்ட வேறுபாடுகளை சரியாக கணக்கிணக்கம் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (iv) | நான்கு (04) வங்கிக் கணக்குகள் தொடர்பாக வங்கிக் கணக்கிணக்கங்களில் காட்டப்பட்ட ரூபா 20,139,121 மற்றும் ரூபா 19,487,118 தொகையான முறையே இனங்காணப்படாத கடன்பட்டோர் மீதிகள் மற்றும் கடன்கொடுத்தோர் மீதிகள் தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை. | **<u>இனங்காணப்படாத வரவு மீதி</u>**<br>செலவு மீதிகளில் ரூபா 6,324,749 தொகை 2020 ஆம் ஆண்டில் தீர்வு செய்யப்பட்டிருந்ததுடன் மிகுதியை தீர்வு செய்வதற்கு வங்கியிடமிருந்து தகவல்கள் கோரப்பட்டுள்ளன. மேலும் இனங்காணப்படாத வரவு மீதிகள் 2020 ஆம் ஆண்டில் தீர்வு செய்யப்படும். | இனங்காணப்படாத வரவு மற்றும் செலவு மீதி கணக்கிணக்கம் செய்யப்பட்டு தீர்வு செய்யப்பட வேண்டும். |
| (v) | கண்டி நகர கழிவு நீர் முகாமைத்துவ செயற்திட்டம் மற்றும் உலர் வலய நகர நீர் மற்றும் சுகாதார செயற்திட்டம் என்பவற்றின் நிதிக்கூற்றுக்களுடன் சபையின் நிதிக்கூற்றுக்களை ஒப்பிடும் போது உரிய செயற்திட்டங்களின் வெளிநாட்டு மானியங்களில் ரூபா 12,243.47 மிலலியன் கூட்டுமொத்தமான வேறுபாடு அவதானிக்கப்பட்டது. கண்டி நகர கழிவு நீர் முகாமைத்துவ செயற்திட்டத்திலுள்ள ரூபா 8,482.62 மில்லியன் வேறுபாட்டில் ரூபா 8,425.68 மில்லியன் வேறுபாட்டிற்கான காரணம் மாத்திரம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மேலும் பதிவு செய்தல் தவறு காரணமாக உலர் வலய நகர நீர் மற்றும் சுகாதார செயற்திட்டத்தில் காணப்படுகின்ற ரூபா 3,760.86 மில்லியன் வேறுபாடு 2020 மார்ச் 30 வரையிலும் சபையின் கணக்குப் புத்தகங்களில் திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை. | **<u>கண்டி நகர கழிவு நீர் முகாமைத்துவ செயற்திட்டம்</u>**<br>இச் செயற்திட்டத்தின் மானியக் கணக்கு கண்டி வடக்கு பததும்பர ஒருங்கிணைந்த டபிள்யூஎஸ்பியின் மானிய பகுதியுடன் சேர்த்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தமை மற்றும் இக் கணக்கில் செயற்திட்டத்தின் உள்ளூர் மானியம் கணக்கீடு செய்யப்பட்டமை காரணமாக வேறுபாடு காணப்பட்டது.<br><br>**<u>உலர் வலய நகர நீர் மற்றும் சுகாதார செயற்திட்டம்</u>**<br>2020 ஆம் ஆண்டில் பதிவுசெய்தல் தவறின் வேறுபாடு திருத்தம் செய்யப்படும். | |

**1.5.4 அங்கீகரிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

| அங்கீகரிக்கப்படாத கொடுக்கல் வாங்கல் விபரம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2014 ஆம் ஆண்டின் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்களிற்காக பெறப்பட்ட ரூபா 85,106,439,687 தொகையான நிலுவைக் கடன் மீதி 2015 | அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட கொள்கைத் தீர்மானம் காரணமாக கடனானது உரிமை | அரசாங்க உரிமை மூலதனமாக மாற்றப்பட்டிருந்த மீதியை |

| | | |
|---|---|---|
| ஆம் ஆண்டிலிருந்து அரசாங்க உரிமை மூலதன கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது. எனினும் பொதுத் திறைசேரி ஏடுகளின் பிரகாரம் ரூபா 59,348,887,214 இற்குச் சமமான தொகை மாத்திரமே சபையின் சார்பில் செலுத்த வேண்டிய கடன்களாக மூலதனமாக்கப்பட்டிருந்தது. ஆகையால் வெளிநாட்டுக் கடன்களாக சபையால் செலுத்தப்பட வேண்டிய ரூபா 25,757,552,473 இற்குச் சமமமான தொகையொன்று பொது முயற்சிகள் திணைக்களப் பணிப்பாளரினால் 2015 யூலை 08 ஆம் திகதிய பிஈ/டபிள்யூஎஸ்/என்டபிள்யூஎஸ்டிபீ/ஜீஈஎன்/2015 ஆம் இலக்க அவரது கடிதத்தின் மூலம் வழங்கப்பட்ட பணிப்புரைகளிற்கு முரணாகவும் 2016 பெப்ரவரி 04 இல் எடுக்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரமும் அரசாங்க உரிமை மூலதனக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | மூலதனத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. | திறைசேரியுடன் கணக்கிணக்கம் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**1.5.5 கணக்காய்விற்கான ஆவணச்சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை**

| விடயம் | தொகை ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) புதிய இணைப்புக் கடன்பட்டோர் | 156,043,490 | விபரமான பட்டோலைகள் மற்றும் வயதுப் பகுப்பாய்வு | (அ) (இ), (ஈ), (எ), (ஏ), (ஒ) மற்றும் (ஓ) - அரச கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | (i) தரவுத் தளமொன்றில் ஒவ்வொரு கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் மீதிகளினதும் விபரமான பட்டியல்கள், ஊழியர்களிற்கு வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்களை பேணுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) விசேட மிகையூதியம் மற்றும் விழா முற்பணங்கள் | 1,211,506 | விபரமான பட்டோலைகள் | (ஆ) 1999 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட ரூபா 10,529,933 விசேட முற்பணம் ஊழியர்கள் ஓய்வுபெறும் சமயத்தில் அறவிடப்பட வேண்டியுள்ளது. | |
| (இ) இடர் கடன்கள், வாகனக் கடன்கள் மற்றும் ஏனைய ஊழியர் கடன்கள் | 16,446,209 | விபரமான பட்டோலைகள் | (இ) என்டபிள்யூஎஸ்டிபீயில் பாரிய இருப்புத் தளம் காணப்படுவதன் காரணமாக இருப்புத் தளத்திற்கான வயதுப் பகுப்பாய்வினை தயாரிப்பது சாத்தியமற்றிருந்தது. | |
| (ஈ) ஏனைய கடன்பட்டோர் | 78,817,838 | விபரமான பட்டோலைகள் | | (ii) விபரமான வரிக் கணிப்பீட்டின் பின்னர் ஆண்டிற்கான செலவினம் வருமானக் கூற்றில் இனங்காணப்பட வேண்டும். |
| (உ) அசைவற்ற மற்றும் மெதுவாக அசையும் இருப்புக்கள் | 1,039,566,195 | வயதுப் பகுப்பாய்வு | (ஈ) சமர்ப்பிக்கப்படாத அறிக்கைகள் தற்போது செயன்முன்னேற்றத்தில் காணப்படுகின்றன. | |
| (ஊ) ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 53,226,240,081 | நிலையான சொத்துப் பதிவேடு மற்றும் மெய்மையாய்வு அறிக்கைகள் | (உ) 2019/2020 ஆண்டிற்கான வரிக் கணிப்பீடு 2019 நவம்பர் 30 இல் ஐஆர்டி இற்கு சமர்ப்பிக்கப்பட | (iii) கணக்காய்விற்கு நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கு முன்னர் குத்தகைக் |
| (எ) வியாபார கடன்கொடுததோர் | 68,854,475 | விபரமான பட்டோலைகள் | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | வேண்டியுள்ளது. | கடன்கொடுத்தோர் உறுதிப்படுத்தல்கள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். |
| (ஏ) | ஏனைய கடன்கொடுத்தோர் | 332,650,903 | விபரமான பட்டோலைகள் | | |
| (ஐ) | வரிச் செலவினம் | 65,383,426 | ஆண்டிற்கான விபரமான வருமான வரி கணிப்பீடு | | (iv) அனைத்து பூர்த்தி செய்யப்பட்ட பட்டியல்களும் நிதிக்கூற்றுக்களுடன் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஒ) | குத்தகை கடன்கொடுத்தோர் | 3,190,775 | வங்கி உறுதிப்படுத்தல்கள் | | |
| (ஓ) | ஏனைய நிறுவனங்களிலுள்ள குறுங்கால வைப்புக்கள் | 13,211,058 | விபரமான பட்டோலைகள் | | (v) கணக்காய்விற்கு நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கு முன்னர் பொருள் மெய்மையாய்வு பூர்த்தி செய்யப்பட வேண்டும். |
| | | | | | (vi) அனைத்து நாளதுவரையாக்கப் பட்ட நிலையான சொத்துப் பதிவேடுகளும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| | | | | | (vii) பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு குறுங்கால வைப்புக்களின் விபரமான பட்டியல்கள் தரவுத்தளமொன்றில் முறையாக பேணப்பட வேண்டும். |
| | | | | | (viii) மேலதிக உருப்படிகளை இனங்காணும் பொருட்டு மெதுவாக அசையும் அல்லது அசைவற்ற உருப்படிகளின் வயதுப் பகுப்பாய்வு தயாரிக்கப்பட வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டியவை

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | ரூபா 1,392 மில்லியன் கூட்டுமொத்தமான வியாபார கடன்பட்டோர், புதிய இணைப்பு கடன்பட்டோர், கழிவகற்றல் கடன்பட்டோர் மற்றும் ஏனைய கடன்பட்டோர் இரண்டு ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்படாமல் காணப்பட்டிருந்தன. அதில் கொழும்பு, களனி, கோட்டை மற்றும் தெகிவளை பிராந்தியங்களில் 54 சதவீதத்தை பிரதிநிதித்துப்படுத்துகின்றன. | சிவப்பு அறிவித்தல்களை அனுப்புதல், நீர் இணைப்பை துண்டித்தல் மற்றும் சட்ட நடவடிக்கையை அமுல்ப்படுத்துதல் போன்ற அறவீட்டு செயன்முறையானது நிலுவையை அறவீடு செய்வதற்காக தொடரப்படுகின்றன. | கடன்பட்டோரிடமிருந்து வரவேண்டிய தொகையை அறவீடு செய்வதற்கு போதியளவும் அவசியமானதுமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | அமைச்சர்களின் உத்தியோகபூர்வ இல்லங்களிற்கு வழங்கப்பட்ட 17 நீர் இணைப்புக்களிற்குரிய ரூபா 3,637,204 தொகை மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு அறவீடு செய்யப்படாமல் காணப்பட்டது. அதில் ரூபா 2,268,899 தொகை அறவீடு செய்யப்படாமல் இரண்டு ஆண்டுகளிற்கு மேலாக காணப்பட்டது. | அறவீடு செய்வதற்கு ஒரே நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் தற்போதும் நிலுவையாகவுள்ளன. | அமைச்சர்களின் உத்தியோகபூர்வ இல்லங்களிலிருந்தான நிலுவைகளிற்கான அறவீட்டு செயன்முறையை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | துண்டிக்கப்பட்ட கடன்பட்டோர் வயதுப் பகுப்பாய்வின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,328,616,496 இற்கு சமமான தொகை நிலுவையாக காணப்பட்டதுடன் அதில் 88 சதவீதம் உள்ளூர், stand posts மற்றும் வணிக நிறுவனங்கள் போன்ற மூன்று நுகர்வோர் வகுதிகளை மாத்திரமே பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. மேலும் மேற்படி மீதியில் 79 சதவீதத்திற்கு சமமான ரூபா 1,049,623,385 தொகை இரண்டு ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாக காணப்படுகின்றது. | துண்டிக்கப்பட்ட நிலுவைகளிற்காக சட்ட ரீதியான அறவீட்டு செயன்முறை தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. எனினும் எதிர்காலத்தில் பதிவழிப்புச் செய்யப்பட வேண்டிய சேகரிக்கப்பட முடியாத நிலுவைகள் இனங்காணப்பட்டிருந்தன. | அறவீட்டு செயன்முறையை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | வணிகத் துறை மற்றும் பொதுத் துறையில் ரூபா 246,674,502 தொகையான மாதிரியாக தெரிவு செய்யப்பட்ட வியாபார கடன்பட்டோர் தொடர்பில் நேரடி உறுதிப்படுத்தல்கள் கோரப்பட்டிருந்ததுடன் ரூபா 2,821,503 தொகையான கடன்பட்டோர் உறுதிப்படுத்தல்களுடன் இணங்கியிருந்ததுடன் ரூபா 1,020,080 தொகையான கடன்பட்டோர் உறுதிப்படுத்தப்பட்ட மீதிகளுடன் இணங்கியிருக்கவில்லை. 2020 யூலை 30 வரை ரூபா 242,832,919 தொகையான கடன்பட்டோர் தொடர்பில் உறுதிப்படுத்தல்கள் பெறப்பட்டிருக்கவில்லை. | சபையானது கடன்பட்டோரிடமிருந்து உறுதிப்படுத்தல்களை கோரியிருந்ததுடன் அவர்களது உறுதிப்படுத்தல்களை நேரடியாக கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்திற்கு அனுப்புமாறு அவர்களை பணித்திருந்தோம். | தற்போதுள்ள வாடிக்கையாளர் தரவுத் தளத்தின் சரியான தன்மையை மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுதல். |
| (v) | சபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர வைத்தியசாலையிலிருந்து பெறவேண்டியவை ரூபா 7,712,773 ஆக காணப்பட்ட போதிலும் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர வைத்தியசாலையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் இது ரூபா 2,201,854 ஆக காணப்பட்டது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | தற்போதுள்ள வாடிக்கையாளர் தரவுத் தளத்தின் சரியான தன்மையை மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுதல். |
| (vi) | 2003 ஆம் ஆண்டு தொடக்கம் 2008 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது பிராந்திய ஆதார நிலையத்தில் (மத்தி) ஒப்பந்ததாரர்களிற்கு வழங்கப்பட்ட ரூபா 8,177,506 தொகையான முற்பணங்கள் மற்றும் 2009 ஆம் ஆண்டு தொடக்கம் 2012 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது தலைமை அலுவலகத்தால் வழங்கப்பட்ட ரூபா 26,103,612 தொகையான முற்பணங்களை அறவீடு செய்வதற்கு சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆர்எஸ்சீ மத்தியின் முற்பணங்களிற்காக சபையின் சட்ட உத்தியோகத்தரிடமிருந்து தகவல்களை பெற்றுக்கொண்ட பின்னர் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நீண்ட கால நிலுவை முற்பணங்களை அறவீடு செய்வதற்கு தாமதமின்றி சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (vii) | வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கொழும்பு மாநகர சபை, மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் மாநகர பொருளாளர் உள்ளடங்கலாக வெளி நிறுவனங்களில் ரூபா 47,430,495 கூட்டுத்தொகையான குறுகிய | மீள்நிதியை பெற்றுக்கொள்ள பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்த போதிலும் தேவையான ஆவணங்கள் கானப்படாததன் காரணமாக அவை காரணமாக அறவீடு செய்யப்பட முடியாதிருந்தன. | வெளி நிறுவனங்களில் காணப்பட்ட வைப்புக்கள் தொடர்பான அறவீட்டு செயன்முறையை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் |

| | | | |
|---|---|---|---|
| | கால வைப்புக்கள் அறவீடு செய்யப்படாமல் மூன்று ஆண்டுகளிற்கு மேல் நிலுவையாக காணப்பட்டிருந்தன. மேலும் வரிசை அமைச்சில் காணப்பட்ட ரூபா 4,378,828 தொகையான முற்பணமொன்று அறவீடு செய்யப்படாமல் ஏழு ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாக காணப்பட்டதுடன் விபரமான தகவல் காணப்படாததன் காரணமாக இதனை கணக்காய்வின் போது சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | மேலும் அண்மைய எதிகாலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | எடுக்கப்பட வேண்டும். |
| (viii) | ரூபா 1,078.80 மில்லியன் தொகையான ஒப்பந்ததாரர் நிறுத்திவைத்தல் பணம் (கண்டி நகர கழிவு நீர் செயற்திட்டத்தின் நிறுத்தி வைத்தல் பணம் தவிர) மற்றும் ரூபா 3.19 மில்லியன் தொகையான மீளளிக்கத்தக்க கேள்வி வைப்புக்கள் உரிய தரப்பினர்களிற்கு விடுவிக்கப்படாமல் அல்லது அவை வருமானமாக கருதப்படாமல் மூன்று ஆண்டுகளிற்கு மேலாக காணப்பட்டது. மேலும் அந் நிறுத்திவைத்தல் பணம் மற்றும் வைப்புக்களுடன் தொடர்புபட்ட ஒப்பந்தங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா என்பதை சரிபார்ப்பதற்கு சான்றுகளெதுவும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டங்கள் பூர்த்தியடைந்ததும் சபை ஒப்பந்ததாரர்களின் வேண்டுகோள்களின் அடிப்படையில் மாத்திரமே உரிய ஒப்பந்ததாரர்களிற்கு நிறுத்திவைத்தல் பணங்களை விடுவிக்கும். குறித்த காலப்பகுதியொன்றின் பின்னர் கோரப்படாத நிறுத்திவைத்தல் தொகைகள் வருமானமாக கருதப்படுகின்றது. | ஒப்பந்ததாரர்களின் நிறுத்திவைத்தல் பணம் மற்றும் மீளளிக்கத்தக்க கேள்வி வைப்புக்களின் மாற்றமடையாத மீதிகளை புலனாய்வு செய்வதற்கும் அவற்றை தீர்ப்பனவு செய்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டியவைகள்

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | ரூபா 35,519,035 கூட்டுத்தொகையான ஏனைய கடன்கொடுத்தோர் மீதி தீர்ப்பனவு செய்யப்படாமல் 03 ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாக காணப்பட்டது. சபையானது ஏனைய கடன்கொடுத்தோரின் முறையான தரவுத்தளமொன்றை பேணியிருக்காததால் அவர்களின் பெறுமதியை உறுதிப்படுத்தல்கள் ஊடாக சரிபார்க்க | காலக்கிரமத்தில் முறைமையிலுள்ள தனிப்பட்ட கடன்கொடுத்தோரிற்கான பதிவுகளை பேணுவதற்கு உப பதிவேட்டு முறைமையொன்றை உருவாக்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன் இது வினைத்திறனை மேம்படுத்தும். | வகைப்படுத்தல் தவறுகளை திருத்தம் செய்யும் பதிவுகளை பேணுவதற்கு உப பதிவேட்டு முறைமையின் அறிமுகப்படுத்தலை துரிதப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

முடியாதிருந்தது.

| | | | |
|---|---|---|---|
| (ii) | ரூபா 94,822,485 தொகையான தீர்க்கப்படாத கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 07 பிராந்தியங்களில் மூன்று (03) ஆண்டுகளிற்கு மேலாக காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | கடன்கொடுத்தோர் அவர்களது வேண்டுகோளின் அடிப்படையில் தீர்ப்பனவு செய்யப்படுவர். | கடன்கொடுத்தோர் தரவுத் தளத்தின் சரியான தன்மையை சரிபார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.3 முற்பணம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| காலிப் பகுதி கழிவு நீர் அகற்றல் செயற்திட்டத்தின் கீழ் கழிவு நீர் சுத்திகரிப்பு பொறியொன்றை நிர்மாணிப்பதற்கு காணியொன்றை சபை கொள்வனவு செய்திருந்ததுடன் இக் காணியை ரூபா 71.5 மில்லியனாக விலை மதிப்பீட்டுத் திணைக்களம் பெறுமதியிட்டிருந்தது. இக் காணிப் பெறுமதியின் 30 சதவீதத்திற்கு சமமான ரூபா 21.25 மில்லியன் தொகை சபையின் சிரேஷ்ட சட்ட உத்தியோகத்தரின் பரிந்துரை மீது முற்பணமாக காணி உரிமையாளரிற்கு 2014 ஏப்ரல் மாதத்தில் வழங்கப்பட்டிருந்தது. எனினும் பின்னர் ஏற்பட்ட காணியின் உரிமைத்துவம் தொடர்பான சிக்கல் காரணமாக செலுத்தப்பட்ட முற்பணத்தை அறவீடுசெய்வதற்கு நீதிமன்ற வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இக் காணியில் சில குடும்பங்கள் ஏற்கனவே தங்கியிருந்ததுடன் முற்பணத்தை பெற்ற பின்னர் இக் காணியிலிருந்து தற்போதுள்ள உரிமையாளர் மன்னை அகற்றியிருந்தார். 2020 யூலை 31 வரையிலும் காணி உரிமையாளரிடமிருந்து அல்லது சபையின் பொறுப்பான உத்தியோகத்தர்களிடமிருந்து செலுத்தப்பட்ட முற்பணம் மற்றும் அது தொடர்பான தண்டப்பணம் என்பன அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சட்டப் பிரிவால் முற்பணக் கொடுப்பனவை அறவீடு செய்வதற்கு தனியான புலனாய்வு தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றதுடன் உரிமையாளரிடமிருந்து ரூபா 21.45 மில்லியனை அறவீடு செய்வதற்கு வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது. காணி சுவீகரிப்பு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பிரதேச செயலாளரால் இக் காணியை பயன்படுத்தும் உரிமை எடுக்கப்பட்டிருந்தது. | செலுத்தப்பட்ட முற்பணத்தை அறவீடு செய்வதற்கும் பொறுப்பான நபர்களிற்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கையை எடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.4 தொங்கல் கணக்கு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் ரூபா 793,388,346 தொகையான சொத்துக்கள், பொறுப்புக்கள மற்றும் உரிமை மூலதன மீதிகள் என்பவற்றின் தேறிய பெறுமதி அத்தகைய மீதிகளை புலனாய்வு செய்வதற்கு நடவடிக்கை எதுவும் | தொங்கல் கணக்கு மீதியை தெளிவுபடுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு நிகழ்ச்சித்திட்டம் தொடங்கப்பட்டு வருகின்றது. | தொங்கல் கணக்கினை தெளிவுபடுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | எடுக்கப்படாமல் 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது தொங்கல் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது அக் கணக்குகள் அத்தகைய மீதிகளை தெளிவுபடுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் மீளக் குறிப்பிடப்பட்டிருந்தன. மேலும் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 46,048 தொங்கல் கணக்கு மீதியொன்று தெளிவுபடுத்தப்படாமல் கணக்குகளில் காணப்பட்டது. | கைகள் மூலம் பதிவு செய்யும் முறைமை கணனிமயப்படுத்தப்பட்டதன் காரணமாக 1999 ஆம் ஆண்டிலிருந்து அம் மீதிகள் தொடர்ந்து வருகின்றன. | வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றிற்கான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) பொது முகாமையாளர் சுற்றறிக்கை | | | |
| (i) 2015 ஆகஸ்ட் 12 ஆம் திகதிய நிர்வாகம்/12/2015 | இணைப்பு துண்டிக்கப்பட்ட பின்னர் மூன்று மாதங்களினுள் நிலுவைக் கடன்பட்டோரை அறவீடு செய்வதற்கு சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 50,000 இற்கு மேற்பட்ட விலைப்பட்டியல் பெறுமதியையுடைய 2,089 இணைப்பு துண்டிக்கப்பட்ட கடன்பட்டோர் தொடர்பாக ரூபா 481,739,086 கூட்டுமொத்தமான நிலுவைக் கடன்பட்டோரை அறவீடு செய்வதற்கு சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பெரிய வாடிக்கையாளர் தளம் காரணமாக அறவீடு செய்வதற்கான சட்ட நடவடிக்கைக்கு கணிசமான காலப்பகுதி எடுக்கின்றது. | பொது முகாமையாளரின் சுற்றறிக்கைகளுடன் கடுமையாக இணங்குவதை உறுதிப்படுத்துதல். |
| (ii) 2018 செப்தெம்பர் 26 ஆம் திகதிய நிர்வாகம்/09/2018 பிரிவு (02) | 5 ஆண்டுகளிற்கு மேல் விடுதிகளில் வசிக்கின்ற ஊழியர்களிடமிருந்து மாதாந்த வாடகை மற்றும் சம்பளத்திலிருந்து 12.5 சதவீத தண்டப்பணம் என்பவற்றிற்கு சமமான மாதாந்த வாடகை அறவிடப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான பிராந்திய ஆதார நிலையத்தில் (தென்) உள்ள 17 | தண்டப்பணத்துடன் சேர்த்து சந்தை விலைவிகித வாடகையை அறவீடு செய்தல் விடயம் விடயமாக மேற்கொள்ளப்படுகின்றது. . | பொது முகாமையாளரின் சுற்றறிக்கைகளுடன் கடுமையாக இணங்குவதை உறுதிப்படுத்துதல். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஊழியர்களிடமிருந்து ரூபா 2,326,566 தொகை மற்றும் 2018 செப்தெம்பர் தொடக்கம் 2019 திசெம்பர் வரை மொனராகலை முகாமையாளர் அலுவலகத்தில் உள்ள 04 ஊழியர்களிடமிருந்து ரூபா 656,732 தொகையான தண்டப்பண வாடகை (தண்டப்பணம் உள்ளடங்கிய வாடகை) அவர்கள் 5 ஆண்டுகளிற்கு மேலாக விடுதிகளில் வசிக்கின்ற போதிலும் 2020 யூலை 31 வரையிலும் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | 2006 செப்தெம்பர் 22 ஆம் திகதிய 30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை | சபையின் ஆட்சேர்ப்புத் திட்டம் மற்றும் பதவியுயர்வு நடைமுறைக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | ஆட்சேர்ப்புத் திட்டத்தை தயாரித்தல் தற்போதும் செயன்முறையில் உள்ளதுடன் இதனை சீரமைப்பதற்கு உரிய தரப்பினர்களிடமிருந்து கருத்துரைகள் கோரப்பட்டுள்ளன. | முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையுடன் கண்டிப்பாக இணங்குவதை உறுதிப்படுத்துதல். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | | | |
| | (i) நிதிப்பிரமாணம் 770 | ரூபா 29,180,175 பெறுமதியான பழுதடைந்த இருப்புக்களை கைதவிர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் 2019 ஆம் ஆண்டு நிதிக்கூற்றில் இது பொருளிருப்பாக உள்ளடக்கப்பட்டிருந்தது. | பழுதடைந்த இருப்புக்கள் சபையின் அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் கைதவிர்க்கப்படுகின்றன. | நிதிப் பிரமாணங்களுடன் இணங்குவதை உறுதிப்படுத்துதல் |
| | (ii) நிதிப்பிரமாணம் 756 | 2019 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு 2020 யூலை 31 வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | கொவிட் 19 பெருந்தொற்று காரணமாக பொருள் மெய்மையாய்வு தாமதமாகியிருந்த போதிலும் பின்னர் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணங்களுடன் கண்டிப்பாக இணங்குவதை உறுதிப்படுத்துதல். |
| | (iii) நிதிப்பிரமாணம் 396 | ஆறு மாதங்களிற்கு மேலாக சமர்ப்பிக்கப்படாது காணப்படுகின்ற ரூபா 24,081,457 தொகையான சமர்ப்பிக்கப்படாத காசோலை தொடர்பாக | 2020 இல் தீர்வை செய்யப்பட்டுள்ளது | நிதிப் பிரமாணங்களுடன் கண்டிப்பாக இணங்குவதை உறுதிப்படுத்துதல். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | 2017 பெப்ரவரி 15 ஆம் திகதிய 1/2017 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கை | வெளிநாட்டு நிதியீட்டம் மூலம் நிதியளிக்கப்படுகின்ற அபிவிருத்தி செயற்திட்டங்களிற்காக ஒரு உள்ளக கணக்காய்வாளர் மாத்திரம் நியமிக்கப்பட்டிருந்தார். | வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களிற்காக உள்ளகக் கணக்காய்வாளர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் நாளதுவரை அங்கீகாரத்தை வழங்கியிருக்கவில்லை. | முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கையுடன் கண்டிப்பாக இணங்குவதை உறுதிப்படுத்துதல். |
| (உ) | 2016 பெப்ரவரி 12 ஆம் திகதிய 02/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | யாழ்ப்பாணத்தில் ரூபா 5,390,596 தொகையான stand post இணைப்புக்களை வழங்குவது தொடர்பான வியாபார பெறவேண்டியவைகள் திறைசேரியின் அங்கீகாரம் பெறப்படாமல் மீளாய்வாண்டின் போது பதிவழிக்கப்பட்டிருந்தது. | இம் மீதியை பதிவழிப்பதற்கு சபை அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. | அரச நிதிச் சுற்றறிக்கைகளுடன் கண்டிப்பாக இணங்குவதை உறுதிப்படுத்துதல். |
| (ஊ) | 2015 மே 25 ஆம் திகதிய 01/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| | (i) 02 ஆம் பிரிவு | சுற்றறிக்கைக்கு முரணாக சபையின் தலைவர், உப தலைவர் மற்றும் செயற்பாட்டு பணிப்பாளர் ஆகியோரிற்கு தலா இரண்டு வாகனங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. | வாகனத் தேவைப்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு பிரிவுகளிற்கு ஒதுக்கப்பட்டுள்ளன. | பொது முயற்சிகள் சுற்றறிக்கைகளுடன் கண்டிப்பாக இணங்குவதை உறுதிப்படுத்துதல். |
| | (ii) 3.1 ஆம் பிரிவு | 2019 சனவரி தொடக்கம் 2019 ஆகஸ்ட் வரையான காலப்பகுதியின் போது அங்கீகரிக்கப்பட்ட எல்லைகளை விஞ்சி தலைவர், உப தலைவர் மற்றும் செயற்பாட்டு பணிப்பாளர் ஆகியோரிற்கு ஒதுக்கப்பட்ட வாகனங்களின் எரிபொருளிற்காக ரூபா 1,590,251 தொகை செலவிடப்பட்டிருந்தது. மேலும் 2019 சனவரி | சபை பத்திரமொன்றின் ஊடாக ஏற்பட்ட செலவினம் மேவுகை செய்யப்படும். | பொது முயற்சிகள் சுற்றறிக்கைகளுடன் கண்டிப்பாக இணங்குவதை உறுதிப்படுத்துதல். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தொடக்கம் 2019 ஒக்தோபர் வரையான காலப்பகுதியின் போது பிராந்திய ஆதார நிலையத்தில் (தென்) பிரதிப் பொது முகாமையாளர் மற்றும் உதவிப் பொது முகாமையாளர் மற்றும் பிராந்திய முகாமையாளரின் எரிபொருளிற்காக ரூபா 463,427 தொகை செலவிடப்பட்டிருந்தது. | | |
| (எ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பிரிவு | மீளாய்வாண்டின் போது சபையானது 2019 திசெம்பர் 31 அளவில் வரிசை அமைச்சிற்கு விடுவிக்கப்பட்ட பதினெட்டு (18) ஊழியர்களிற்கு சம்பளங்கள் மற்றும் படிகளாக ரூபா 22.03 மில்லியன் தொகையை செலுத்தியிருந்தது. அதற்கிணங்க 2015 திசெம்பர் தொடக்கம் 2019 திசெம்பர் 31 வரையான காலப்பகுதிக்கு விடுவிக்கப்பட்ட ஊழியர்களிற்காக நீர் வழங்கல் அமைச்சால் சபைக்கு ரூபா 168.45 மில்லியன் தொகையை மீள்நிரப்புச் செய்ய வேண்டியுள்ளது. | அமைச்சு செயலாளரால் கோரிக்கைகள் மேற்கொள்ளப்படும் போது தற்காலிக அடிப்படையில் அவர்கள் அமைச்சிற்கு விடுவிக்கப்படுகின்றனர். எனினும் சம்பளங்களை மீள்நிரப்பு செய்வதற்கான பாதீட்டு நிதியேற்பாடுகளை அவர்கள் கொண்டிருக்கவில்லை என அமைச்சு அறிவித்திருந்தது. | பொது முயற்சிகள் சுற்றறிக்கைகளுடன் கண்டிப்பாக இணங்குவதை உறுதிப்படுத்துதல். |
| (ஏ) | கம்பஹா, அத்தனகல்ல மற்றும் மினுவாங்கொட ஒருங்கிணைந்த நீர் வழங்கல் செயற்திட்டத்தின் வசதி உடன்படிக்கையின் 3.1, 18.15(இ) பகுதியின் 2 ஆம் பிரிவு | பணவளிப்பு செய்யப்பட்ட கடன் பெறுகைகளில் ருபா 15,273.76 மில்லியன் தொகை உரிய நோக்கங்களிற்கு பயன்படுத்தப்படாமல் 2019 ஒக்தோபர் 08 இல் ஐந்து (05) ஐ.அ.டொலர் வைப்புக் கணக்குகளில் முதலீடு செய்யப்பட்டிருந்தன. | கடப்பாடுகள் ஏற்படும் வரை நிதிப் பயன்பாட்டின் வினைத்திறனை முன்னேற்றுவதற்கு குறுங்கால முதலீடாக மிகை நிதி முதலீடு செய்யப்பட்டிருந்தது. | |
| (ஐ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | | | |
| | (i) XIX ஆம் பந்தியின் 5 ஆம் பிரிவு | மாதிரி தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் பிரகாரம் மாத்தறை, காலி, அம்பாந்தோட்டை மற்றும் மொனராகலை | அளவு மற்றும் வகை போன்றவற்றை பொறுத்து விடுதிகளின் வாடகை வேறுபடலாம். | தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுடன் கண்டிப்பாக இணங்குவதை உறுதிப்படுத்துதல். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | முகாமையாளர் அலுவலகம் மற்றும் பிராந்திய ஆதார நிலையம் (மத்தி) தொடர்பாக 109 பதவியணியினர் விடுதிகளிலிருந்து ரூபா 125 தொடக்கம் ரூபா 1,000 வரையான வீச்சில் மாத்திரமே மாதாந்த வாடகை அறவிடப்பட்டு வருகின்றமை அவதானிக்கப்பட்டது. | | |
| (ii) | XIX ஆம் பந்தியின் 4.1 ஆம் பிரிவு | மாத்தறை மற்றும் மொனராகலை முகாமையாளர் அலுவலகங்கள் மற்றும் பிராந்திய ஆதார நிலையம் (மத்தி) என்பவற்றின் ஐந்து பதவியணியினர் விடுதிகள் ஐந்து வெளிநபர்களால் குடியிருக்கப்படுகின்றன. | பெயரளவு வாடகை அடிப்படையில் தகுதியான ஊழியர்களிற்கு குடும்ப விடுதிகள் வழங்கப்படுகின்றன. | தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுடன் கண்டிப்பாக இணங்குவதை உறுதிப்படுத்துதல். |
| (ஓ) | எவ்ஐடிஐசீ வழிகாட்டல்களின் 14.6 ஆம் பிரிவு (நிர்மாணத்திற்கான ஒப்பந்த நிபந்தனைகள்) | மாத்தறை கட்டம் (iv) நீர் வழங்கல் செயற்திட்டத்திலுள்ள இடைக்கால கொடுப்பனவு சான்றிதழ் இல. 01 மற்றும் 02 தொடர்பான மொத்த ஒப்பந்தப் பெறுமதியின் 2.5 சதவீதத்திற்கு குறைவான விலைப்பட்டியல்களிற்காக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | மொத்த ஒப்பந்தப் பெறுமதியின் 2.5% இனை விடக் குறைவாக கொடுப்பனவுகள் காணப்படுகின்ற போதிலும் இடைக்கால கொடுப்பனவு சான்றிதழ் இல. 01 மற்றும் 02 என்டிபீ வங்கியின் வட்டி உரிமைக் கோரிக்கையை தவிர்ப்பதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்தது. | எவ்ஐடிஐசீ வழிகாட்டல்கள் மற்றும் ஒப்பந்த நிபந்தனை ஏற்பாடுகளுடன் இணங்குவதை உறுதிப்படுத்துதல். |

### 1.8 காசு முகாமைத்துவம்

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | 1999 தொடக்கம் 2006 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது திருகோணமலை, களனி மற்றும் அம்பாறை பிராந்தியங்களில் நிகழ்ந்த ரூபா 248.44 மில்லியன் காசு மோசடியானது 2019 திசெம்பர் 31 வரையிலும் பொறுப்பான நபர்களிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. | குற்றவியல் வழக்குகளில், என்டபிள்யூஎஸ்டிபீ மேற்படி நபர்களிடமிருந்து நிதி நட்டங்களை அறவீடு செய்வதற்கு கல்கிசை மாவட்ட நீதிமன்றத்தில் சிவில் வழக்குகளை தாக்கல் செய்திருந்தது. | எதிர்காலத்தில் கீழ்குறிப்பிடப்பட்ட சூழ்நிலைகளிலிருந்து தடுக்க உள்ளக கட்டுப்பாட்டு நடைமுறைகள் காணப்படுவதை உறுதிப்படுத்துதல். |
| (ii) | 2001 ஆம் ஆண்டின் போது பண்டாரவளை பிராந்தியத்தில் நிகழ்ந்த ரூபா 272,735 காசு | வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்த போதிலும் தொழில்நுட்ப | எதிர்காலத்தில் கீழ்குறிப்பிடப்பட்ட சூழ்நிலைகளிலிருந்து தடுக்க உள்ளக |

| | | |
|---|---|---|
| மோசடி 2019 திசெம்பர் 31 வரையிலும் பொறுப்பான நபர்களிடமிருந்து அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | காரணமொன்றினால் இது மீண்டும் தாக்கல் செய்யப்பட வேண்டியுள்ளது. | கட்டுப்பாட்டு நடைமுறைகள் காணப்படுவதை உறுதிப்படுத்துதல். |

**2. நிதி மீளாய்வு**

---------------------

**2.1 நிதிசார் விளைவுகள்**

-----------------------------------

மீளாயவாண்டின் தொழிற்பாட்டு விளைவு ரூபா 1,111,451,220 தொகையான வரிக்கு முன்னரான தேறிய நட்டமாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டில் ஏற்பட்ட தேறிய நட்டம் ரூபா 517,037,963 (மீளக் குறிப்பிடப்பட்டது) தொகையாகும். ஆகையால் நிதிசார் விளைவுகளில் ரூபா 594,413,257 தொகையான பாரிய இலாப வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நிர்வாகச் செலவினத்தில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பு மற்றும் 50 சதவீதத்தால் செலுத்த வேண்டிய கடன்கள் மீதான நிதிக் கிரயம் அதிகரித்தமை என்பன நிதி விளைவுகளில் ஏற்பட்ட இந்த வீழ்ச்சிக்கு பிரதான காரணங்களாக பங்களித்திருந்தன.

**2.2 பிரான வருமான செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு**

---------------------------------------------------------------------------------------

| விபரங்கள் | முரண் தொகை அதிகரிப்பு/ (வீழ்ச்சி) (ரூபா மில்லியன்) | முரண் % | முரணிற்கான காரணம் |
|---|---|---|---|
| விற்பனைக் கிரயம் | 793 | 5 | நீரிறைத்தல் கிரயம், இரசாயனக் கிரயம், திருத்தம், பராமரிப்பு வாடகை மற்றும் வீதங்கள் போன்றவற்றில் அதிகரிப்பு |
| நிதி வருமானம் | (120) | (8) | முதலீட்டு வருமானத்தில் வீழ்ச்சி |
| நிதி கிரயம் | 203 | 77 | முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ஆண்டின் போது கடன் பணவளிப்புக்களில் அதிகரிப்பு |

**2.3 விகிதப் பகுப்பாய்வு**

-----------------------------------

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான சபையின் முக்கிய சில விகிதங்கள் பின்வருமாறுள்ளன.

| **ஆண்டு** | **2019** | **2018** |
|---|---|---|
| மொத்த இலாப எல்லை | 36.29 | 36.22 |
| தேறிய இலாப எல்லை | (4.26) | (2.30) |
| நடைமுறை விகிதம் (தடவைகளின் எண்ணிக்கை) | 1.48 | 2.81 |
| திரவ விகிதம் (தடவைகளின் எண்ணிக்கை) | 1.36 | 2.48 |
| மொத்த சொத்து புரள்வு (தடவைகளின் எண்ணிக்கை) | 0.04 | 0.05 |

மேற்குறிப்பிட்ட தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான சபையின் பிரதான நிதி விகிதங்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது பாதகமான நிலையில் காணப்பட்டிருந்தன. முன்னைய ஆண்டின் 2.3 சதவீத தேறிய நட்ட எல்லை மீளாய்வாண்டிற்கான 4.26 சதவீத தேறிய நட்ட எல்லை வரை மேலும் வீழ்ச்சியடைந்திருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்ட வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகள் 130 சதவீதத்தாலும் மூலதனத்தின் தற்போதைய பகுதி மற்றும் கடன்கள் மீதான வட்டி

என்பன 120 சதவீதத்தாலும் அசாதாரணமாக அதிகரித்தமை காரணமாக நடைமுறைச் சொத்து விகிதம் மற்றும் திரவ விகிதம் என்பன முறையே 1.33 மற்றும் 1.12 தடவைகளால் கடுமையாக குறைவடைந்திருந்தன. மேலும் மீளாய்வாண்டின் போது வெளிநாட்டு கடன் வெளிப்பாட்டில் ஏற்பட்ட அதிகரிப்பு காரணமாக பிரதானமாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது சபையின் மொத்த நிலுவைக் கடன் மீதிகள் ரூபா 100.28 பில்லியனிலிருந்து ரூபா 151.35 பில்லியன் வரை அல்லது 50 சதவீதத்தால் அதிகரித்திருந்தன. ஆகையால் உரிமை மூலதனத்திற்கான கடன் (இணைவு) விகிதம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 32 சதவீதத்திலிருந்து 48 சதவீதம் வரை அல்லது 19 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | உள்நாட்டு வங்கிகளால் நிதியளிக்கப்பட்ட இரண்டு (02) செயற்திட்டங்கள் தொடர்பாக சபையால் தவணைகளின் மீள்கொடுப்பனவில் தாமதம் காரணமாக தவணைதப்பிய வட்டியாக ரூபா 1,561,573 இற்குச் சமமான தொகையொன்று ஏற்பட்டிருந்தது. | கடன் சேவையை தீர்ப்பனவு செய்வதற்கு பொதுத் திறைசேரியால் நிதிகள் வழங்குவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக எச்என்பீ மற்றும் கொமர்ஷல் வங்கி ரூபா 1,561,573 தண்டப்பண வட்டியை அறவிட்டிருந்தது. | உரிய திகதிகளில் கடன் சேவை கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுவதனை உறுதிப்படுத்துதல். |
| (ii) | களு ஆற்றில் குடிநீருடன் கடல் நீர் கலப்பதற்கான தீர்வொன்றாக உவர்ப்பு நீர் தடையை நிர்மாணிப்பதற்கு ரூபா 11,284,500 ஒப்பந்த தொகையில் 2016 பெப்ரவரி 03 இல் ஒப்பந்தமொன்று வழங்கப்பட்டது. எவ்வாறாயினும், நிர்மாண நோக்கம் அடைந்து கொள்ளப்பட்டிருக்காததுடன் நீரில் உப்புத் தண்ணீர் கலப்பது எதிர்பார்க்கப்பட்டவாறு தீர்க்கப்பட்டிருக்காததனால் ஏற்பட்ட முழுச் செலவினமும் சிக்கனமற்றதாக காணப்பட்டது. | என்டபிள்யூஎஸ்டிபீ ஒப்பந்தத்தை வழங்கும் போது இச் சிக்கலை தீர்ப்பதற்கு உண்மையாக முயற்சி எடுத்திருந்தது. திடீர் வெள்ளம் காரணமாக ஏற்பட்ட துரதிஷ்டவசமான நிகழ்வு ஒப்பந்ததாரர் மற்றும் சபையின் கட்டப்பாட்டிற்கு அப்பாற்பட்டதென்பது தெளிவாக உள்ளது. | (i) உரிய நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு ஒப்பந்தங்கள் திட்டமிடப்பட்டிருப்பதை உறுதிப்படுத்துதல்.<br>(ii) ஒப்பந்தமொன்று ஆரம்பிக்கப்பட்டு பூர்த்திசெய்யப்படும் வரை முறையான கண்காணிப்பு பொறிமுறையொன்று காணப்படுவதை உறுதிப்படுத்துதல். |
| (iii) | கடன நீர் வழங்கல் செயற்திட்டத்தின் கீழ் செயற்திட்டத்தின் நிகழத்தக்க நிதியேற்பாடுகளை பயன்படுத்தி $1000m^3$ இயலளவு ஒன்றுடன் நிலத்தடி நீர்த்தேக்கம் | நிதிகள் காணப்படாததன் காரணமாக ஒப்பந்தத்தை வழங்குவதனூடாக வேலை மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஆகையால் ஒப்பந்ததாரர் 12% எல்லையை மேந்தலையாக | ஒப்பந்ததாரர்களிற்கான தேவையற்ற கொடுப்பனவுகளை தடுக்கும் பொருட்டு ஒப்பந்த ஆவணங்களை மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் பம்பி இல்லமொன்றை நிர்மாணிப்பதற்கு ரூபா 67,368,370 ஒப்பந்தப் பெறுமதியில் உப ஒப்பந்தமொன்று வழங்கப்பட்டிருந்தது. எனினும் உப ஒப்பந்தத்திற்குரிய பெறுகை நடவடிக்கைகளின் போது தீவிரமாக இணக்கம் செய்யப்படாமல் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த இடைக்கால கொடுப்பனவு சான்றிதழ்களுடாக உப ஒப்பந்ததாரரிற்கு நிதிகளை அனுப்பும் போது பிரதான ஒப்பந்ததாரரால் இலாப எல்லையாக ரூபா 8,084,204 தொகை அறவிடப்பட்டிருந்தது. | அறவிட்டிருந்தார். | |
| (iv) | ஊழியர் இலக்கம் 2022982 இனை கொண்ட சிரேஷ்ட உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் ஒழுக்காற்று புலனாய்வு தீர்மானங்களிற்கு உட்படுத்தப்பட்டு 2017 மார்ச் 1 இல் மீள பதவி வழங்கப்பட்டு கடமைகளெதுவுமின்றி 2017 மார்ச் 30 இல் சபையின் தொழில்நுட்பக் கணக்காய்வுப் பிரிவிற்கு ஒதுக்கப்பட்டிருந்தார். எனினும் 2017 மார்ச் 31 தொடக்கம் 2020 ஆகஸ்ட் 31 வரையான காலப்பகுதிக்கு மிகையூதியம் உள்ளடங்கலாக தனிப்பட்ட வேதனாதிகளாக அவ் ஊழியரிற்கு ரூபா 6,637,668 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | குறித்துக் கொள்ளப்பட்டது. | நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஊழியர்களின் ஒழுக்காற்று புலனாய்வுகளை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதுடன் மனித வளங்களின் முழுமையான பயன்பாட்டை உறுதிப்படுத்துதல். |

**3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் போது அமுல்ப்படுத்தப்பட்ட பொல்கஹவெல, பொதுஹெர, அளவ்வ ஒருங்கிணைந்த நீர் வழங்கல் செயற்திட்டம், தேதுறு ஓயா நீர் வழங்கல் செயற்திட்டம், ஆனமடுவ நீர் வழங்கல் செயற்திட்டம் மற்றும் | சுங்கத் தீர்வைகள் வழங்குவதை அரசாங்கம் இடைநிறுத்தியதால் உடனடி கடப்பாட்டை தீர்ப்பதற்கு போதியளவு நிதிகளை சபை கொண்டிருக்கவில்லை. | நிதிகள் காணப்படாததால் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களை தாமதமின்றி விடுவிப்பதற்கு அல்லது தாமதமாக இறக்கப்படுவதற்கு ஒப்பந்ததாரருடன் பேச்சுவார்த்தை |

| | | | |
|---|---|---|---|
| | களனி வலது நீர் வழங்கல் செயற்திட்டம் கட்டம் (ii) தொடர்பாக துறைமுகத்திலிருந்து மூலப்பொருள் கொள்கலன்களை விடுவிப்பதில் தாமதம் காரணமாக ரூபா 376.52 மில்லியன் கூட்டுத்தொகையான தொகையொன்று தாமதக் கட்டணங்களாக மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. | | நடாத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல். |
| (ii) | 28 இணைப்புக்கள் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் மீளாய்வாண்டிற்கான வருடாந்த நுகர்வு ரூபா 44.52 மில்லியன் பட்டியலிடப்பட்ட வருமானத்திற்கு சமமான 1,246,157 கியூபிக் மீற்றராகும். எனினும் 2019 திசெம்பர் 31 வரையிலும் இது பட்டியலிடப்பட்டிருக்கவில்லை. | இது தற்போது புலனாய்வுக் கட்டத்திலுள்ளதுடன் இது சீர்செய்யப்படும். | அனைத்து நீர் நுகர்வுகளும் பட்டியலிடப்பட்டுள்ளமையை உறுதிப்படுத்துதல். |
| (iii) | சந்தைப் பெறுமதியுடன் ஒப்பிடும் போது தேதுறு ஓயா நீர் வழங்கல் செயற்திட்டத்தில் கட்டிட நிர்மாணத்திற்காக ஒப்பந்ததாரரிற்கு ரூபா 21 மில்லியன் மேலதிகக் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. | ஒப்பந்தத்தினுள் உள்ள விடயமொன்றை மாத்திமே இது குறிக்கின்றது. இது வடிவமைப்பு மற்றும் நிர்மாண ஒப்பந்தமொன்றாக உள்ளதால் இதனை பிரிக்க முடியாதுள்ளது. | அசாதாரண ஏற்பாடுகளுடன் பீஓகியூ விடயங்கள் தொடர்பாக ஒப்பந்ததாரர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு நடவடிக்கைகளை எடுத்தல். |

**3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | களுகங்கை கட்டம் (iii) செயற்திட்டம், ஸ்ரீ ஜெயவர்த்தனபுர கோட்டை செயற்திட்டம் மற்றும் காத்தான்குடி கழிவுநீர் அகற்றல் செயற்திட்டம் என்பவற்றிற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 450 மில்லியன் வெளிநாட்டு ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக ஒதுக்கீடு எதுவும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | களுகங்கை கட்டம் ii செயற்திட்டத்திற்கான மதியுரை உடன்படிக்கை அண்மையில் கைச்சாத்திடப்பட்டள்ளது. காத்தான்குடி மற்றும் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர கோட்டை செயற்திட்டங்கள் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. | திட்டமிடப்பட்டவாறு செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்படுவதையும் செயற்திட்டங்களிற்காக ஒதுக்கப்பட்ட நிதிகள் முழுமையாக பயன்படுத்தப்படுவதையும் உறுதிப்படுத்துதல். |
| (ii) | மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் பிரகாரம் மாத்தறை, அம்பாந்தோட்டை, பண்டாரவளை, | போதியளவு நீர் காணப்படாததன் காரணமாக இப் பிராந்தியங்களில் | தாமதமின்றி நுகர்வோர் முறைப்பாடுகள் கையாளப்படுவதை உறுதிப்படுத்துதல். |

| | | | |
|---|---|---|---|
| | கம்பஹா மற்றும் மத்திய பிராந்தியங்களில் வருமானமற்ற நீரிற்கு நேரடியாக பங்களிக்கக்கூடிய நுகர்வோர் முறைப்பாடுகள் விசேடமாக முறைப்பாடுகளை கையாளுதல் தொடர்பாக மெதுவான செயன்முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. | கேள்வியை எதிர்கொள்ள முடியாதிருந்தது. மேலும் ஆர்டிஏ மற்றும் பிஆர்டிஏ இடமிருந்து அங்கீகாரம் வழங்குவதிலுள்ள தாமதம் காரணமாக கசிவுகள் உடனடியாக திருத்தம் செய்யப்பட முடியாதிருந்தன. | |
| (iii) | தபுத்தேகம நீர் வழங்கல் செயற்திட்டத்தின் உள்ளீர்ப்பு நிர்மாணம் 2014 ஆம் ஆண்டில் ஒப்பந்தமளிக்கப்பட்ட போதிலும் 2020 யூன் வரையிலும் அதற்கான இடத்தை முடிவுசெய்வதற்கு முகாமைத்துவம் தவறியிருந்தது. | தபுத்தேகம செயற்திட்டத்தில் நீரை பகிர்ந்தளிப்பது தொடர்பாக தற்போது விவசாயிகளுடன் கலந்துரையாடல்கள் நடைபெற்று வருகின்றன. | நீர் வழங்கல் செயற்திட்டங்களை ஆரம்பிப்பதற்கு முன்னர் நீர் வளங்கள் தொடர்பான சிக்கல்களை இறுதியாக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (iv) | 2008 தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது களுத்துறை பிராந்தியத்தில் மானி வாசிப்பாளரொருவரால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,145,235 தொகையான காசு மோசடி 2020 யூலை 31 வரையிலும் பொறுப்பான தரப்பினர்களிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. | நட்டங்களை கணிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் அத்தகைய சந்தர்ப்பங்களில் நட்டங்களை கணிப்பீடு செய்வதற்கான முறைமையொன்றை அறிமுகப்படுத்துவதற்கு வணிகப் பிரிவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. ஆலோசனைக்காக இவ் விடயம் சட்டமா அதிபர் திணைக்கத்திற்கு குறிப்பிடப்பட்டுள்ளது. | மோசடியான மானி வாசிப்பு காரணமாக ஊழியர்களிடமிருந்து ஏற்படும் நட்டங்களை அறவீடு செய்வதற்கு முறையான பொறிமுறையொன்றை அறிமுகப்படுத்துவதற்கும் ஏற்கனவேயுள்ள நிர்வாக சுற்றறிக்கைகளை நாளதுவரையாக்குவதற்கும் உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (v) | 2017 தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது மானி வாசிப்பாளர்களால் மேற்கொள்ளப்பட்ட மோசடி தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் பிரகாரம் இரண்டு மோசடிகள் மொனராகலை பிராந்தியத்திலும் இரண்டு மோசடிகள் களுத்துறை மற்றும் மத்திய பிராந்தியத்திலும் மேற்கொள்ளப்பட்டிருந்தன. மேலும் மொனராகலை பிராந்தியத்திலுள்ள வெல்லவாயவில் மேற்கொள்ளப்பட்ட மோசடிகளில் நுகர்வோரால் விலைப்பட்டியல் கொடுப்பனவுகள் நிராகரிக்கப்பட்டதன் காரணமாக ஏற்பட்ட நட்டம் 2020 சனவரி 31 வரையிலும் | மொனராகலை பிராந்தியத்திலுள்ள மானி வாசிப்பாளர் ஒப்பந்த அடிப்படையின் கீழ் இருந்ததுடன் அவரது சேவை முடிவுறுத்தப்பட்டிருந்தது. அத்துடன் சட்டமா அதிபர் திணைக்களத்திடமிருந்தான ஆலோசனையுடன் நட்டத்தை அறவீடு செய்வதற்கான நடவடிக்கை செயன்முறையில் காணப்படுகின்றது. | நிரந்தர ஊழியர்களிலிருந்து மானி வாசிப்பாளர் வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மோசடியான மானி வாசிப்பு கரணமாக ஏற்பட்ட நட்டங்களை அறவீடு செய்வதற்கு முறையான பொறிமுறையொன்றை அமுல்ப்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அறவிடப்பட்டிருக்கவில்லை. | | |
| (vi) | சுத்திகரிக்கப்பட்ட நீர் உற்பத்தியை அதிகரிப்பதுடன் வருமானமற்ற நீர் அளவை படிப்படியாக அதிகரித்தல் வருமானமற்ற நீரை குறைப்பதற்கு பயனுள்ள முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்காததை சுட்டிக்காட்டுகின்றது. அதற்கிணங்க சபை வருமானமற்ற நீர் சதவீதத்தை 23.3 சதவீதத்திற்கு குறைப்பதற்கு திட்டமிட்டிருந்த போதிலும் 2018 ஆம் ஆண்டின் நாடு முழுவதுமான வருமானமற்ற நீர் சதவீதமானது 2019 ஆம் ஆண்டிலும் மாற்றமடையாமல் காணப்பட்டது. | ஆர்எஸ்சீ மட்டங்களில் என்ஆர்டபிள்யூ இனை குறைப்பதற்காக குறுங்கால அளவீடுகளை இனங்கண்டு அமுல்படுத்துவதற்கு என்டபிள்யூஎஸ்டிபீ தொடர்கின்றது.<br><br>O&M பாதீடு மட்டுப்படுத்தப்படுகின்றதால் பிராந்தியங்களில் என்ஆர்டபிள்யூ குறைப்பிற்கான நிதி ஒதுக்கீட்டை திட்டமிட்டவாறு கொண்டிருக்காதமையும் இலக்குகளை அடைந்துகொள்வதை மோசமாக பாதிக்கின்றது. | வருமானமற்ற நீரை குறைத்தல் தொடர்பாக அதிக கவனம் செலுத்துவதற்கும் அது தொடர்பாக போதுமான பாதீட்டை ஒதுக்கீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (vii) | கொழும்பு நகரம், காலி, கேகாலை, இரத்தினபுரி, அம்பாந்தோட்டை, பண்டாரவளை, கண்டி மற்றும் திருகோணமலை பிராந்தியங்களில் மீளாய்வாண்டின் போது வருமானமற்ற நீர் சதவீதம் 25 சதவீதத்திற்கு மேற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. சட்டவிரோத இணைப்புக்கள், 70 ஆண்டுகளிற்கு முன்னர் நிறுவப்பட்டு தற்போதுள்ள குழாய் வரிசை முறைமைகளை மாற்றத் தவறியமை, ஒரு சில மானி வாசிப்பாளர்களின் முறைகேடுகள், வருமானமற்ற நீர் தொடர்பான நுகர்வோர் முறைப்பாடுகள் மீது குறைவான கவனம் செலுத்தப்பட்டமை மற்றும் கசிவுகள் என்பன இப் பிராந்தியங்களில் வருமானமற்ற நீரின் உயர் மட்டத்திலான சதவீதத்திற்கு பிரதானமாக பங்களிக்கக்கூடிய காரணிகளாக இனங்காணப்பட்டிருந்தன. எனினும் செயற்பாடற்ற மொத்த நீர் மானிகள் மற்றும் அவற்றின் முறையற்ற அளவுத்திருத்தம், முறையான பதிவேடுகள் காணப்படாமை, பூச்சிய விலைப்பட்டியல்கள் மற்றும் மதிப்பிடப்பட்ட பட்டியல்களை வழங்குதல் போன்றவற்றின் காரணமாக அதிகமான பிராந்தியங்களில் வருமானமற்ற நீர் சதவீதங்களின் சரியான தன்மை சந்தேகத்திற்கிடமாகவுள்ளது. அதற்கிணங்க 2019 ஒக்தோபர் 31 இல் உள்ளவாறு 24 | அவதானிப்பு குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது. | பிராந்திய ரீதியாக என்ஆர்டபிள்யூ குறைப்பு தொடர்பாக அதிக கவனம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் உரிய திகதிகளினுள் என்ஆர்டபிள்யூ குறைப்பு செயற்திட்டங்களை பூர்த்தி செய்வதை துரிதப்படுத்துவதற்கும் உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

பிராந்தியங்களிலுள்ள 1332 மொத்த மானிகளில் 159 மானிகள் அல்லது 12 சதவீதம் செயற்பாடற்றிருந்தமை அவதானிக்கப்பட்டது. ஆகையால் செயற்பாடற்ற மொத்த மானிகளை மாற்றுவதற்கும் அவற்றை உரிய நேரத்தில் அளவுத்திருத்தம் செய்வதற்கும் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

(viii) கொழும்பு நகரத்திலுள்ள வருமானமற்ற நீரை குறைக்கும் பொருட்டு குறிப்பிடத்தக்களவு முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இது மீளாய்வாண்டின் இறுதியிலும் 41 சதவீதமாக காணப்பட்டது. இது தொடர்பாக இரண்டு பிரதான வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்கள் தற்போது அமுல்ப்படுத்தப்பட்டு வருகின்ற போதிலும் நீர் வழங்கலின் பிரதான பகுதிகளின் புனரைமப்பு போதியளவு அடைந்துகொள்ளப்பட்டிருக்கவில்லை.

செயற்திட்ட தாமதத்திற்கான பிரதான காரணங்களாவன.

- சரியான வரைபடங்கள் மற்றும் ஏனைய பயன்பாடுகளின் ஜீஐஎஸ் தரவு என்பன காணப்படாததன் காரணமாக எதிர்பார்க்கப்படாத நிலக்கீழ் பயன்பாடுகள்.

- ஏனைய முகவர்களிடமிருந்தான அனுமதிகளில் தாமதங்கள்.

- ஆர்டிஏ இன் காணி சுவீகரிப்பு, பெற்றோலியம், துறைமுகங்கள் அதிகாரசபை மற்றும் சதுட்டு உயன காரணமாக பிரதானமாக வடக்கு மற்றும் தெற்கு feeder mains தாமதமாகின்றன.

- மட்டுப்படுத்தப்பட்ட வேலை மணித்தியாலங்கள் மாத்திரமே இரவு வேலைக்காக அனுமதிக்கப்படுகின்றன.

- வேலையை ஆரம்பிப்பதில் எதிர்பார்க்கப்படாத தாமதம்.

- தற்போதுள்ள வரிசைகள் போன்றவற்றின் பணியை நீக்குவதிலுள்ள சிக்கல்கள்

**3.4 சர்ச்சைத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்**

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வழியிலுள்ள இறக்குமதி செய்யப்ட்ட இருப்புகள் ரூபா 876,232,735 தொகையாக இருந்தது. அதில் ரூபா 162,922,454 தொகையான இருப்புக்கள் புலனாய்வு செய்யப்படாமல் இரண்டு ஆண்டுகளிற்கு மேலாக வழியிலுள்ள சரக்காக காணப்பட்டது. மேலும் வழியிலுள்ள இறக்குமதி செய்யப்பட்ட இருப்பு நிதி நிலைமைக் கூற்றில் இருப்பாக காட்டப்படுவதற்குப் பதிலாக வேலை ஆரம்பிப்பு மற்றும் ஏனைய முற்பணங்களின் கீழ் தவறுதலாக காட்டப்பட்டிருந்தது. | பொருட்களை கொள்வனவு செய்வதற்கு வழங்கப்பட்ட முற்பணங்களை இக்கணக்கு பதிவு செய்கின்றதால் நிதிக்கூற்றில் வேலை ஆரம்பிப்பு மற்றும் ஏனைய முற்பணங்களில் இது பிரதிபலிக்கப்படுகின்றது. குறித்த பிராந்தியத்திற்கு பொருட்கள் பெறப்பட்டதும் இருப்புக்களாக இது பதிவு செய்யப்படுகின்றது. | வழியிலுள்ள மீதிகளில் நீண்ட கால இருப்புக்களை புலனாய்வு செய்வதற்கும் நிதிக்கூற்றுக்களில் வழியிலுள்ள இருப்பை சரியாக இனங்காணுவதை உறுதிப்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | இருப்புக்களை பௌதீக மெய்மையாய்வு செய்வதற்கு முன்னர் இருப்பு பதிவேடுகளில் சகல இருப்பு பெறுவனவுகள் மற்றும் வழங்கல்கள் பதிவு செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும் பெறுவனவுகள் மற்றும் வழங்கல்கள் தொடர்பில் ரூபா 762,254,425 கூட்டுத்தொகையான தேறிய வரவு மீதி மற்றும் ரூபா 894,694,445 கூட்டுத்தொகையான தேறிய செலவு மீதிகள் மெய்மையாய்வு செய்யப்பட்டதன் பின்னர் இருப்பு மீதிக்கு சீராக்கபப்டிருந்தன. | நவம்பர் மாத ஆரம்பத்தில் இருப்பு மெய்மையாய்வு ஆரம்பிக்கின்றதுடன் திசெம்பர் மாதம் வரையான சீராக்கங்கள் அதற்கிணங்க சீராக்கம் செய்யப்பட வேண்டும். | இருப்புக்களை பௌதீக மெய்மையாய்வு செய்வதற்கு முன்னர் இருப்பு பதிவேடுகளில் சகல இருப்பு பெறுவனவுகள் மற்றும் வழங்கல்களை பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | வட மத்திய நிலத்தடி நீர் பிரிவிலுள்ள மீள்நிரப்பத்தக்க வேலைகளின் ரூபா 6,005,215 தொகையான அசாதாரண வரவு மீதி மற்றும் வழியிலுள்ள காசின் ரூபா 665,580 தொகையான அசாதாரண செலவு மீதி என்பன 2020 யூன் 30 வரையிலும் தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை. | உறுதிப்படுத்தல் பூர்த்திசெய்யப்பட்டதும் மீள்நிரப்பத்தக்க வேலைகளின் மீதிகள் மற்றும் வழியிலுள்ள காசு மீதி என்பவற்றை தீர்வு செய்வதற்கு உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு 2020 ஆம் ஆண்டில் சீர்செய்யப்படும். | வழியிலுள்ள இருப்புக்களின் இவ் அசாதாரண மீதிகள் புலனாய்வு செயயப்பட்டு தீர்வு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | கொட்டிகாவத்தை முல்லேரியா நீர் வழங்கல் திட்டத்திற்காக நிலத்தடி நீர்த்தேக்கம் மற்றும் நீர் தாங்கியொன்றை நிர்மாணிக்கும் பொருட்டு கொதடுவ வைத்தியசாலை வளாகத்தில் அமைந்துள்ள காணியொன்று 2001 ஏப்ரல் 04 இல் கொள்வனவு செய்யப்பட்டு 2001 தொடக்கம் 2018 திசெம்பர் 31 வரையான காலப்பகுதிக்காக ரூபா 10,103,750 கூட்டுத்தொகையான குத்தகை வாடகை மற்றும் 2001 தொடக்கம் 2009 வரையான காலப்பகுதிக்கு ரூபா 104,500 தண்டப்பணம் என்பன சபையால் கொலன்னாவ பிரதேச செயலாளரிற்கு செலுத்தப்பட்டிருந்தன. எனினும் கொடுப்பனவின் சரியான தன்மையை மதிப்பிடுவதற்கு குத்தகை உடன்படிக்கை எதுவும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படும். | செல்லுபடியான குத்தகை உடன்படிக்கையொன்றை அனைத்து குத்தகை வாடகைகளும் அடிப்படையாகக் கொண்டுள்ளதை உறுதிப்படுத்துதல். |

### 3.5 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | பயன்படுத்தக்கூடிய நிலையில் காணப்படாத ரூபா 8,692,053 கூட்டுமொத்தமான மூவாயிரத்து நூற்று தொண்ணூற்று இரண்டு (3192) மானி உதிரிப்பாகங்கள் மற்றும் நூற்று நாற்பத்து நான்கு (144) மொத்த மானி உதிரிப்பாகங்கள் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு உரிய நோக்கங்களிற்கு பயன்படுத்தப்படாமல் இரண்டு ஆண்டுகளிற்கு மேலாக இரத்மலானை வேலைத்தளத்தில் காணப்பட்டன. | நீர் மானி உதிரிப்பாகங்கள் திருத்தப்பட்டு ஏற்கனவே பயன்படுத்தப்பட்டிருந்தன. | வருடாந்த தேவைப்பாட்டை அடிப்படையாகக் கொண்டு நீர்மானிகள் கட்டளையிடப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | பத்து வெவ்வேறு விட்டங்களில் (diameters) ரூபா 54,253,067 பெறுமதியான ஆறாயிரத்து நானூற்று முப்பத்து நான்கு (6434) நீர் மானிகள் மீளாய்வாண்டின் இறுதியில் உரிய நோக்கங்களிற்கு பயன்படுத்தப்படாமல் ஒரு | இதில் அதிகமானவை ¾ மானிகளை உள்ளடக்குகின்றதுடன் 19,045 இல் 4,000 தற்போதும் மிகுதியாகவுள்ளதுடன் மிகுதி புதிய நீர் இணைப்புக்களிற்காக | எதிர்காலத்தில் அவற்றின் இருப்பு கட்டுப்பாட்டு மட்டங்களை கருத்தில் கொண்ட பின்னர் நீர் மானிகளிற்கான கட்டளைகளை இடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டிற்கு மேலாக பிரதான களஞ்சியங்களில் காணப்பட்டன. மேலும் குறித்த சில நீர் மானிகளின் உத்தரவாதக் காலப்பகுதி ஏற்கனவே காலாவதியாகியிருந்தமை அவதானிக்கப்பட்டது. | பயன்படுத்தப்பட்டிருந்தது. | |
| (iii) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 547,150,801 மற்றும் ரூபா 492,415,394 தொகையான முறையே அசைவற்ற இருப்புக்கள் மற்றும் மெதுவாக அசையும் இருப்புக்கள் களஞ்சியங்களில் காணப்பட்டதுடன் அவை சபையின் மொத்த இருப்புக்களில் முறையே 6 மற்றும் 5 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. | மெய்மையாய்வு செய்யும் நேரத்தில் அசைவற்ற மற்றும் மெதுவாக அசையும் பொருட்களை மெய்மையாய்வுக் குழு இனங்காணுகின்றது. குறித்த சில வகையான குழாய் பொருத்துக்கள் இறக்குமதி செய்யப்பட்டு ஏதாவது அவசர வேலைகளை மேற்கொள்வதற்காக வேலைத்தளத்தில் வைத்திருக்கப்படுகின்றன. | அசைவற்ற இருப்புக்கள் மற்றும் மெதுவாக அசையும் இருப்புக்களை தவிர்ப்பதற்கு எதிர்காலத்தில் அவற்றின் இருப்புக் கட்டுப்பாட்டு மட்டங்களை கருத்தில் கொண்ட பின்னர் பொருளிருப்பு உருப்படிகளிற்கான கட்டளைகளை இடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iv) | கடுகஸ்தோட்டை சுத்திகரிப்பு பொறியில் 2007 ஆம் ஆண்டின் போது நிறுவப்பட்ட KVA 2000 இயலளவுடைய மின்பிறப்பாக்கியொன்று 2016 மார்ச் 28 இல் ரூபா 15 மில்லியன் தொகை செலவிடப்பட்டு திருத்தம் செய்யப்பட்டிருந்தது. எனினும் திருத்தம் செய்ததிலிருந்து 2 ஆண்டுகளின் பின்னர் 2019 ஏப்ரல் 01 இல் உள்ளவாறு 05 ஆண்டு உத்தரவாதக் காலப்பகுதி மற்றும் 1500 உத்தரவாத மணித்தியாலங்களில் 189 மணித்தியாலங்கள் பூர்த்தி செய்யப்பட்டு பழுது ஏற்பட்டிருந்ததுடன் 2020 மார்ச் 30 வரையிலும் இதனை திருத்தம் செய்து பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது ஒப்பந்ததாரரிற்கு அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் உதிரிப்பாகங்களிலுள்ள தாமதம் காரணமாக திருத்தத்தை பூர்த்திசெய்தல் தாமதமடைந்துள்ளது. | உத்தரவாதக் காலப்பகுதிக்குள் பழுதடைந்த இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை திருத்தம் செய்து பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் சபைச் சொத்துக்களின் முழுமையான பயன்பாட்டை உறுதிப்படுத்துதல். |
| (v) | கண்டி பெரும்பாக நீர் வழங்கல் செயற்திட்டத்திற்கான ஆய்வுகூடங்கள் 2016 ஆம் ஆண்டில் ரூபா 166,993,899 கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த | இவ் ஆய்வுகூடத்திற்கு ஐஎஸ்ஓ 17025 தராதர அங்கீகார சான்றிதழை சபையால் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. ஆகையால் ஆய்வுகூட நிர்மாணத்தின் | கண்டி பெரும்பாக நீர் வழங்கல் செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட ஆய்வுகூடத்தின் வளங்களை பயன்படுத்துவதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும் சபையால் கொள்வனவு செய்யப்பட்ட நீர் பொருத்துக்களின் பரிசோதனை தவிர 2020 ஆகஸ்ட் 31 வரையிலும் உரிய நோக்கங்களிற்கு இது முழுமையாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | குறித்துரைக்கப்பட்ட நோக்கம் முழுமையாக அடைந்துகொள்ளப்படவில்லை. எனினும் என்டபிள்யூஎஸ்டிபீயால் கொள்வனவு செய்யப்பட்ட நீர் பொருத்துக்களின் பரிசோதனைக்காக இது பயன்படுத்தப்படுகின்றது. | வேண்டும். |
| (vi) | 1m$^3$ இயலளவுடைய இரண்டு Alum பம்பிகள் மாத்தளை நீர் சுத்திகரிப்பு பொறிக்காக 2016 ஏப்ரலில் ரூபா 3,895,000 கிரயத்தில் (பொறியியலாளர் மதிப்பீட்டை விட 47 சதவீதம் கூடுதலாக) கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் 2020 மார்ச் 30 வரையிலும் மேற்படி பம்பிகள் உரிய நோக்கங்களிற்கு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஆகையால் மீவதுர சுத்திகரிப்பு பொறிக்கு உரிய பம்பிகள் வழங்கப்பட்டுள்ளன. | தேவையற்ற கொள்வனவுகளை தவிர்ப்பதற்கும் பொறுப்பான உத்தியோகத்தர்களிடமிருந்து அவ்வாறு ஏற்பட்ட நட்டங்களை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 3.6 செயற்திட்டங்கள் அல்லது மூலதன வேலைகளில் தாமதங்கள்

**கணக்காய்வு விடயம்**

ஒப்பந்ததாரர்களின் மோசமான செயலாற்றல், காணி விடுவிப்பிலுள்ள தாமதம், சுற்றாடல் மற்றும் மீள்குடியேற்ற சிக்கல்கள், ஒப்பந்தம் வழங்குவதில் தாமதம், ஒப்பந்ததாரரால் வழங்கப்பட்ட தரம் குறைந்த பிஈ குழாய்கள், ஆர்டிஏ இடமிருந்து அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதிலுள்ள தாமதம் போன்றன காரணமாக எட்டு வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பில் கருத்தில் கொள்ளக்கூடிய தாமதங்கள் அவதானிக்கப்பட்டன. விபரங்கள் பின்வருமாறு உள்ளன.

| செயற்திட்டம் | மதிப்பிடப்பட்ட கிரயம் (ரூபா மில்.) | ஆரம்பித்த திகதி | பூர்த்தி செய்த திகதி | நீடிப்பு காலப்பகுதி | 2019 திசெ. 31 இல் உள்ளவாறு தாமதங்கள் (நாட்கள்) |
|---|---|---|---|---|---|
| உலர் வலய நீர் வழங்கல் மற்றும் சுகாதார செயற்திட்டம் | 19,165 | 2009/11/13 | 31/12/2016 | 2016/12/31 – 2018/12/31 | 1095 |
| யாழ்ப்பாணம் கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதார செயற்திட்டம் | 16,475 | 2011/02/15 | 14/02/2017 | 2017/02/14 – 2020/12/31 | 1050 |
| கண்டி நகர கழிவு நீர் முகாமைத்துவ செயற்திட்டம் | 17,278 | 2012/02/03 | 30/09/2017 | 2017/09/30 – 2022/12/31 | 848 |

**முகாமைத்துவ கருத்துரை**

<u>யாழ்ப்பாணம் கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதார செயற்திட்டம்</u>

ஆர்டிஏ, நீர்ப்பாசனத் திணைக்களம் போன்றவற்றிடமிருந்து அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதில் தாமதம் மற்றும் ஒப்பந்ததாரர்களின் மோசமான செயலாற்றல் காரணமாக செயற்திட்டத்தை பூர்த்தி செய்தல் தாமதமடைந்திருந்தது.

<u>கண்டி நகர கழிவு நீர் முகாமைத்துவ செயற்திட்டம்</u>

- பெறுகை செயன்முறையில் தாமதம், வடிவமைப்பு, மூலப்பொருட்களை வழங்குதல் மற்றும் நிர்மாணங்களில் ஒப்பந்ததாரர்களின் தாமதம் வடிவமைப்புக்களில் திருத்தங்கள், பல்வேறு நிறுவனங்களின்

**பரிந்துரை**

செயற்திட்ட தாமதங்கள் மற்றும் அதன் மூலம் ஒப்பந்ததாரர்களிற்கான கால நீடிப்புக்களை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் ஒப்பந்ததாரர் ஒருவரிற்கு கால நீடிப்பொன்று வழங்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் ஒப்பந்த உடன்படிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் தாமதக் கட்டணங்கள் கழிக்கப்படுவதை உறுதிப்படுத்துதல்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| கொழும்பு பெரும்பாக கழிவு நீர் முகாமைத்துவ செயற்திட்டம் | 1731.70 | 2009/12/18 | 31/12/2014 | 2014/12/31 – 2017/12/31 | 1825 | தலையீடுகள் மற்றும் எதிர்பாராத காரணங்கள், சாதகமற்ற காலநிலை நிலைமைகள், கட்டாய வேலைநிறுத்தங்கள், நாட்டிலுள்ள அமைதியின்மை மற்றும் பயங்கரவாத தாக்குதல்கள் அனைத்தும் செயற்திட்டத்தின் செயன்முன்னேற்றத்திற்கு பங்களித்திருந்தன. |
| கொழும்பு பொரும்பாக நீர் மற்றும் கழிவு நீர் முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் (i) | 14,784 | 2013/09/25 | 31/12/2016 | 2016/12/31 – 2020/12/31 | 1095 | |
| கொழும்பு பொரும்பாக நீர் மற்றும் கழிவு நீர் முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் (ii) | 13,917 | 2014/09/03 | 30/06/2019 | 2019/06/30 – 2020/12/31 | 184 | **<u>கொழும்பு பொரும்பாக நீர் மற்றும் கழிவு நீர் முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் 01 மற்றும் நிகழ்ச்சித்திட்டம் 02</u>** தாமதத்திற்கான பிரதான காரணங்களாவன. |
| வெளியீட்டு அடிப்படையிலான உலகளாவிய பங்குடமை உதவிச் செயற்திட்டம் | 13,000 | 2011/12/31 | 31/12/2015 | 2015/12/31 – 2019/03/31 | 1460 | • சரியான வரைபடங்கள் மற்றும் ஏனைய பயன்பாடுகளின் ஜீஐஎஸ் தரவுகள் காணப்படாததன் காரணமாக எதிர்பார்க்கப்படாத நிலக்கீழ் பயன்பாடுகள் |
| அனுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் செயற்திட்டம் (கட்டம் 01) | 11,515 | 2013/02 | 02/2018 | 2018/02 – 2020/04/30 | 671 | • CMC, CEB, RDA, SL Police, SLLRDC, SLPA, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் போன்ற ஏனைய முகவர்களிடமிருந்தான அனுமதிகளில் தாமதங்கள்.<br>• ஏனைய பயன்பாடுகளிற்கு விசேடமாக மின்சார சபைக்கு அங்கீகாரத்தை குறிப்பிடுதல்<br>• ஆர்டிஏ இன் காணி சுவீகரிப்பு, பெற்றோலியம், துறைமுகங்கள் அதிகாரசபை மற்றும் சதுட்டு உயன தாமதங்கள் காரணமாக பிரதானமாக வடக்கு மற்றும் தெற்கு feeder mains தாமதமாகின்றன.<br>• மட்டுப்படுத்தப்பட்ட வேலை மணித்தியாலங்கள் மாத்திரமே இரவு வேலைக்காக அனுமதிக்கப்படுகின்றன.<br>• வேலையை ஆரம்பிப்பதில் எதிர்பார்க்கப்படாத |

தாமதம்.

- தற்போதுள்ள வரிசைகளின் பணியை நீக்குவதிலுள்ள சிக்கல்கள்

**வெளியீட்டு அடிப்படையிலான உலகளாவிய பங்குடமை உதவிச் செயற்திட்டம்**
கேள்வி ஆவணத்தை பரிந்துரை செய்வதில் தாமதம் மற்றும் செயற்திட்ட நோக்கெல்லை மீதான தீர்மானத்தில் தாமதம் காரணமாக கேள்வி கோரல் தாமதமடைந்துள்ளது. இதற்கு மேலதிகமாக புதிய மூலப்பொருட்களை போக்குவரத்து செய்தல், நிர்மாணத்தை மேற்பார்வை செய்தல் மற்றும் இயந்திரங்களை போக்குவரத்து செய்தல் என்பவற்றிலுள்ள சிக்கல்கள், வடிவமைப்பு மற்றும் பயனாளிகளை தெரிவு செய்வதிலுள்ள சிக்கல்கள்.

## 3.7 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்

| கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| (i) **3.7.1 <u>கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவ முன்னேற்ற நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 01 மற்றும் செயற்திட்டம் 02</u>**<br><br>பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (அ) செயற்திட்டம் 01 ஆனது 2013 செப்தெம்பர் 25 இல் அதன் நடவடிக்கைகளை தொடங்கியிருந்ததுடன் 2016 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. எவ்வாறாயினும், ஒப்பந்ததாரரின் மோசமான செயலாற்றல் காரணமாக 2020 திசெம்பர் 31 வரை இரண்டு தடவைகள் கால நீடிப்பு வழங்கப்பட்டிருந்தது. | **(அ) <u>செயற்திட்டம் 01</u>**<br>தாமதத்திற்கான பிரதான காரணங்களாவன;<br><br>• சரியான வரைபடங்கள் மற்றும் ஏனைய பயன்பாடுகளின் ஜீஐஎஸ் தரவுகள் காணப்படாததன் காரணமாக எதிர்பார்க்கப்படாத நிலக்கீழ் பயன்பாடுகள்.<br><br>• CMC, CEB, RDA, SL Police, | (i) ஒப்பந்த காலப்பகுதியினுள் செயற்திட்டத்தை பூர்த்தி செய்யக்கூடியவாறு செயற்திட்ட வேலைகளை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.<br><br>(ii) ஒப்பந்த உடன்படிக்கையிலுள்ள ஏற்பாடுகளுடன் |

| | | | |
|---|---|---|---|
| | நிகழ்ச்சித்திட்டத்தின் செயன்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு ஒட்டுமொத்த பௌதீக மற்றும் நிதி செயன்முன்னேற்றம் முறையே 75.22 சதவீதம் மற்றும் 84.12 சதவீதம் ஆகும். | SLLRDC, SLPA, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் போன்ற ஏனைய முகவர்களிடமிருந்தான அனுமதிகளில் தாமதங்கள்.<br>• ஏனைய பயன்பாடுகளிற்கு விசேடமாக மின்சார சபைக்கு அங்கீகாரத்தை குறிப்பிடுதல்.<br>• ஆர்டிஏ இன் காணி சுவீகரிப்பு, பெற்றோலியம், துறைமுகங்கள் அதிகாரசபை மற்றும் சதுட்டு உயன தாமதங்கள் காரணமாக பிரதானமாக வடக்கு மற்றும் தெற்கு feeder mains தாமதமாகின்றன.<br>• மட்டுப்படுத்தப்பட்ட வேலை மணித்தியாலங்கள் மாத்திரமே இரவு வேலைக்காக அனுமதிக்கப்படுகின்றன.<br>• வேலையை ஆரம்பிப்பதில் எதிர்பார்க்கப்படாத தாமதம்.<br>• தற்போதுள்ள வரிசைகளின் பணியை நீக்குவதிலுள்ள சிக்கல்கள் | கண்டிப்பாக இணங்குவதை உறுதிப்படுத்துதல். |
| (ஆ) | நிகழ்ச்சித்திட்ட செயற்திட்டம் - 02 இன் செயற்திட்டக் காலப்பகுதி 2019 யூன் 30 இல் காலாவதியாகியிருந்தது. பின்னர் செயற்திட்டக் காலப்பகுதி 2022 ஒக்தோபர் 15 வரை நீடிக்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்தால் அமுல்ப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளின் மெதுவான செயன்முன்னேற்றம் காரணமாக செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த பௌதீக மற்றும் நிதி செயன்முன்னேற்றம் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முறையே 46.65 சதவீதம் மற்றும் 52.11 சதவீதமாக காணப்பட்டன. | **(ஆ) <u>செயற்திட்டம் 02</u>**<br>ஒப்பந்ததாரரின் மோசமான செயலாற்றலை குறைப்பதற்காக ஒப்பந்ததாரருடன் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டிருந்ததுடன் அதற்கிணங்க அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தன. | |
| (இ) | வடக்கு, கிழக்கு, மேல் மற்றும் தென் பகுதிகளில் வருமானமற்ற நீரிற்கான முறைமை புனரமைப்பிற்கான ஒப்பந்தம் குழாயிடல் மற்றும் அமுக்க பரிசோதனை, இணைப்புகள் வழங்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை ஆகியவற்றின் பிரகாரம் மெதுவான செயன்முன்னேற்றத்தை | (இ)திருத்தம் செய்யப்பட்ட செயன்முன்னேற்றம் வழங்கப்பட்டிருந்தது. | |

காட்டுகின்றன.

(ii) **3.7.2 <u>அம்பத்தலே சக்தி சேமிப்பு செயற்திட்டம்</u>**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| | | | |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்டம் 2014 செப்தெம்பர் 29 இல் அதன் நடவடிக்கைகளை தொடங்கியிருந்ததுடன் 2019 யூன் 30 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. எவ்வாறாயினும், பட்டியலிடப்பட்ட செயற்திட்டக் காலப்பகுதியினுள் செயற்திட்டம் இலக்கினை அடைந்துகொள்ள தவறியிருந்ததுடன் செயற்திட்டக் காலப்பகுதி 2022 மே 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது. செயற்திட்ட செயன்முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 மற்றும் 2020 மே 31 இல் உள்ளவாறான ஒட்டுமொத்த பௌதீக செயன்முன்னேற்றம் முறையே 23.08 சதவீதம் மற்றும் 26.31 சதவீதமாகும். மேலும் செயற்திட்டத்தின் ஐந்து பிரதான கூறுகளில் 5km, 1200mm DI குழாய்களை (ஐசீபீ03) வழங்கி பொருத்துவதுடன் கொதடுவ 15,000m$^3$ நீர்த்தேக்கம் மற்றும் booster பம்பி நிலையம் என்பவற்றின் நிர்மாணத்திற்கான ஒப்பந்தங்கள் 2020 யூலை 31 வரையிலும் வழங்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்ட நடவடிக்கைகளில் தாமதத்திற்கான காரணங்கள்.<br><br>**<u>வடிவமைப்பு திருத்தம் மற்றும் நிர்மாணம், மேற்பார்வை மதியுரை ஒப்பந்தம்</u>**<br>நிர்மாண ஒப்பந்த பொதி தாமதங்கள் காரணமாக மூலப் பட்டியலின் பிரகாரம் சர்வதேச மற்றும் உள்ளூர் முக்கிய நிபுணர்கள் அணிதிரட்டப்பட்டிருக்கவில்லை.<br><br>**<u>Ellie House நீர்த்தேக்கத்திற்கு அம்பேத்தலேயிலிருந்து 9 km dia. 1200 mm DI குழாய்களை வழங்கி பொருத்துதல்</u>**<br>• பாதீட்டு ஒதுக்கீடுகள் காணப்படாததன் காரணமாக வற்றுடனான நிலுவைக் கொடுப்பனவுகள் தாமதடைந்திருந்தன.<br>• 2019 நவம்பர் 25 இல் குழாயிடல் வேலைகளை ஒப்பந்ததாரர் அங்கீகரித்திருந்தார்.<br>• 2020 மார்ச் 18 இல் கொவிட் காரணமாக வேலைகள் இடைநிறுத்தப்பட்டிருந்ததுடன் 2020 மே 06 இல் மீள ஆரம்பிக்கப்பட்டிருந்தன.<br><br>**<u>5km, 1200mm DI குழாய்களை வழங்கி பொருத்துவதுடன் கொதடுவ 15,000m$^3$ நீர்த்தேக்கம் மற்றும் booster பம்பி நிலையம் என்பவற்றின் நிர்மாணம்</u>**<br>• பரஸ்பர முடிவுறுத்தல் மற்றும் கொடுப்பனவு தீர்ப்பனவின் பின்னர் ஒப்பந்ததாரர் நீதிமன்ற வழக்கை மீளப்பெற்றிருந்ததுடன் என்டபிள்யூஎஸ்டிபீ இரண்டாவது குறைந்த கேள்விதராரிற்கு ஒப்பந்தத்தை வழங்குவதற்கு | (i) ஒப்பந்த காலப்பகுதியினுள் செயற்திட்டத்தை பூர்த்தி செய்யக்கூடியவாறு செயற்திட்ட வேலைகளை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.<br><br>(ii) ஒப்பந்த உடன்படிக்கையிலுள்ள ஏற்பாடுகளுடன் கண்டிப்பாக இணங்குவதை உறுதிப்படுத்துதல்.<br><br>(iii) நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் செயற்திட்ட நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.<br><br>(iv) கணக்குகளிற்கு எடுக்கப்படுகின்ற செயற்திட்டக் கிரயத்தின் சரியான தன்மையை உறுதிப்படுத்துதல். |

பெறுகை செயன்முறையை ஆரம்பித்துள்ளது.

- பெறுகை செயன்முறையில் தாமதம் காரணமாக 2020 ஆகஸ்ட் 04 இல் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது.

**<u>அம்பேத்தலே உற்பத்தி வசதிகளின் நம்பிக்கைத்தன்மை முன்னேற்றம் மற்றும் சக்தி சேமிப்பு</u>**

- ஏஎவ்டியின் ஆண்டிறுதி விடுமுறை காரணமாக முற்பணக் கொடுப்பனவு 2 மாதங்களால் தாமதமடைந்திருந்தது.
- ஒப்பந்ததாரரின் மோசமான செயலாற்றல் காரணமாக செயன்முன்னேற்றம் மிகவும் குறைவாக உள்ளது.
- கொவிட் - 19 பெருந்தொற்று காரணமாக ஒப்பந்தம் பாதிப்படைந்திருந்தது.

**<u>என்டபிள்யூஎஸ்டிபீயின் மேற்கு பகுதி உற்பத்திக்கு உபகரணம் மற்றும் இயந்திரங்களை வழங்குதல்</u>**

- Lot C இற்கான கேள்வி மீளக் கோரப்பட்டிருந்த போதிலும் சலுகைகள் பெறப்பட்டிருக்காததுடன் Lot F முடிவுறுத்தப்பட்டு செயலாற்றல் பிணைமுறி காசாக்கப்பட்டிருந்தது.

(ஆ) 9 Km (DI 1200) கருவிகளை அம்பேத்தலேயிலிருந்து Ellie House நீர்த்தேக்கத்திற்கு வழங்கி பொருத்துவதற்கான ஒப்பந்தம் முதலாவது ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்ட பின்னர் 2019 நவம்பரில் பரிந்துரைக்கப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்த செயன்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஒப்பந்தத்தின் ஒட்டுமொத்த பௌதீக மற்றும் நிதி செயன்முன்னேற்றம் முறையே

(ஆ)அமுக்க பரிசோதனையின் பின்னர் பொதுவாக நிரந்தர வீதி சீரமைப்பு மேற்கொள்ளப்படுகின்ற போதிலும் வீதி பயன்படுத்துநர்கள் மற்றும் ஆர்டிஏ ஆல் எழுப்பப்பட்ட பொதுப் பிரச்சனைகள் காரணமாக ஒரு சில பிரிவுகளில் நிரந்தர வீதி சீரமைப்பை ஒப்பந்ததாரர் மேற்கொள்ள வேண்டியிருந்தது.

இரண்டு பிரிவுகளில் இரண்டு குழுக்களால் குழாயிடல் மேற்கொள்ளப்பட்டிருந்த

26.08 சதவீதம் மற்றும் 48.64 சதவீதமாகும். மேலும் மொத்த 9000 மீற்றர் குழாயிடலில் 14.87 சதவீதத்திற்கு சமமான 1,338.35 மீற்றர் மாத்திரம் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு குழாயிடப்பட்டிருந்ததுடன் 2020 யூலை 31 இல் உள்ளவாறு இது 3347.92 மீற்றர்களாகும். நிரந்தர வீதி சீரமைப்பு குழாயிடலின் 3347.92 மீற்றரில் 1019 மீற்றர்கள் மாத்திரம் குழாயிடல் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் பூர்த்தி செய்யப்பட்ட குழாயிடல் வேலைகளின் அமுக்கப் பரிசோதனை 2020 யூலை 31 வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

போதிலும் எதிர்பார்க்காத வேலைத்தள நிலைமைகள் காரணமாக அப் பிரிவுகள் எதுவும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) பொருத்தமான இயலளவுகளுடன் வினைத்திறனான பம்பிகளை நிறுவுவதன் ஊடாக சக்தியை சேமிப்பதற்கு அம்பேத்தலே வசதிகளின் நம்பிக்கைத்தன்மை முன்னேற்றம் மற்றும் சக்தி சேமிப்பு என்பவற்றிற்கான ஒப்பந்தம் குறைக்கப்பட்ட உராய்வு மற்றும் ஏனைய உற்பத்தி வசதிகளின் முன்னேற்றம் ஊடாக பரிமாற்ற நட்டங்களை குறைக்கின்றமை மொத்த செயற்திட்டத்தின் நிறையில் 45.60 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. எனினும் செயற்திட்ட நடவடிக்கைகள் ஆரம்பித்த திகதியிலிருந்து 04 ஆண்டுகள் கடந்த பின்னர் 2018 செப்தெம்பர் 13 இல் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. ஒப்பந்தத்தின் செயன்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் 83.96 சதவீத பௌதீக செயன்முன்னேற்ற இலக்கில் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 21.24 சதவீதம் மாத்திரம் அடைந்து கொள்ளப்பட்டிருந்தது.

(இ) வெவ்வேறு ஒப்பந்த வழங்கல் திகதிகளிற்கேற்ப நிர்மாண ஒப்பந்த பொதி அமுல்ப்படுத்தல் தேவைப்பாட்டுடன் பொருந்துமாறு மதியுரை சேவை பதவியணியினரின் ஆரம்ப அணிதிரட்டல் பட்டியல் மாற்றப்பட்டிருந்தது. ஆகையால் 2020 மே 31 வரையான ஒரு ஆண்டு காலப்பகுதிக்கு மதியுரை ஒப்பந்த சேமிப்பை பயன்படுத்தி காலநீடிப்பு வழங்கப்பட்டிருந்தது.

(ஈ) 5km, 1200mm DI குழாய்களை வழங்கி பொருத்துவதுடன் கொதடுவ நீர்த்தேக்கம் மற்றும் booster பம்பி நிலையம் என்பவற்றின் நிர்மாணத்திற்கான புதிய ஒப்பந்தம் 2020 யூலை 31 வரையிலும் இரண்டாவது

(ஈ) ஐசீபீ 03 ஒப்பந்தத்தின் பரஸ்பர முடிவுறுத்தல் செயன்முறை காரணமாக ஐடிஎச் வைத்தியசாலைக்கான 06 எண்ணிக்கையான விடுதிகளை நிர்மாணிக்கும் கடப்பாடு என்டபிள்யூஎஸ்டிபீயால்

குறைந்த கேள்வியாளரிற்கு வழங்கப்பட்டிருக்காததுடன் இவ் ஒப்பந்தத்தின் கீழ் நீர்த்தேக்கம் மற்றும் booster பம்பி நிலையம் என்பவற்றின் நிர்மாணத்திற்காக ஐடிஎச் வைத்தியசாலையின் முன்மொழியப்பட்ட காணியை சுவீகரித்தல் 2013 ஆம் ஆண்டிலிருந்து இறுதியாக்கப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக ஐடிஎச் வைத்தியசாலை முகாமைத்துவம் சபைக்கு காணியை விடுவிப்பதற்கு மறுத்திருந்ததால் ஐடிஎச் வளாகத்திலிருந்து அம்பத்தலே வளாகத்திற்கு மேற்குறிப்பிட்ட நிர்மாணங்களை மாற்றுவதற்கு முன்மொழியப்பட்டிருந்தது. ஆகையால் 2022 சனவரி 31 இன் ஏஎவ்டி கடன் வசதியின் இறுதி திகதிக்கு முன்னர் நிர்மாணத்தை பூர்த்தி செய்வதில் தாமதம் ஏற்படக் கூடும் என கணக்காய்வு அவதானித்திருந்தது.

நிறைவேற்றப்பட முடியாதிருந்தது. இறுதியாக கொவிட் - 19 பெருந்தொற்று மற்றும் ஏனைய சுகாதார பிரச்சனைகள் காரணமாக மேற்படி நோக்கத்திற்காக காணியை விடுவிப்பதற்கு ஐடிஎச் முகாமைத்துவம் மறுத்திருந்தது. 2020 ஆகஸ்ட் 04 இல் 2 அவது குறைந்த கேள்வியாளரிற்கு ஐசீபீ 03 ஒப்பந்தத்தை வழங்குதல் கொவிட் 19 பெருந்தொற்று காரணமாக தாமதமாகியிருந்தது.

(உ) 13691 மீற்றர் குழாயிடல் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் காப்பெற் மேலடுக்கிற்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை என்பவற்றிற்கு ரூபா 402.8 மில்லியன் தொகை (வற் அல்லாமல்) செலுத்தப்பட்டிருந்தது. எனினும் 588 மீற்றர் குழாயிடல் வேலைகள் மாத்திரம் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் அத் திகதியிலுள்ளவாறு மேற்கொள்ளப்பட்ட வேலைகளின் மொத்தக் கிரயமாக ரூபா 402.8 மில்லியன் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருந்தது.

(உ)வழங்கப்பட்ட ஒப்பந்த தொகையின் பகுதியல்லாத ஜீஓஎஸ்எல் நிதியிலிருந்து இக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அத் தொகை செயற்திட்டத்திற்கான கிரயமாக உள்ளதுடன் பௌதீக செயன்முன்னேற்றத்தில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

(iii) **3.7.3** **<u>நகரங்களிற்கான சுகாதாரம் மற்றும் தூய்மை முயற்சி செயற்திட்டம் (கட்டம் - 01)</u>**

73,000 மக்களிற்கான கழிவுநீர் சேகரிப்பு மற்றும் சுத்திகரிப்பு முறைமையை விரிவுபடுத்தி சுகாதார சேவைகளிற்கான நுழைவுகளை

(i) ஒப்பந்த காலப்பகுதியினுள் செயற்திட்டத்தை பூர்த்தி செய்யக்கூடியவாறு செயற்திட்ட வேலைகளை

| | | |
|---|---|---|
| முன்னேற்றுதல், வறுமைக் குறைப்புக் கொள்கைகள் மற்றும் தந்திரோபாயங்களின் அபிவிருத்தி ஊடாக பின்தங்கிய வீட்டுடமையாளர்களிற்கான சேவைக்கான நுழைவு வசதியளித்தல், கடலோர மற்றும் கடற்கரை சுற்றுச்சூழல்களை பாதுகாத்தல் மற்றும் பல்லுயிர்களை பராமரித்தல் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களாகும்.<br><br>இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.<br><br>(ii) தேவையற்ற தாமதங்களை தவிர்க்கும் பொருட்டு குறிப்பிடப்பட்ட காலப்பகுதியினுள் உப ஒப்பந்தங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (அ) செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2016 யூன் 01 இல் தொடங்கியிருந்ததுடன் 2022 யூன் 30 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது. எனினும் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒட்டுமொத்த பௌதீக செயன்முன்னேற்றம் 4.05 சதவீதமாக காணப்பட்டது. | (அ)வடிவமைப்பு மற்றும் மேற்பார்வை மதியுரை (டிஎஸ்சீ) ஒப்பந்தம் வழங்குவதில் ஆரம்ப பெறுகை தாமதமொன்று காணப்பட்டது. மதியுரையாளர்கள் அணிதிரட்டப்படாதமை, drone கணக்கெடுப்புக்களில் தடை, பல நாடுகளால் விதிக்கப்படுகின்ற பயணத் தடைகள் மற்றும் 2019 ஏப்ரல் 21 சம்பவத்துடன் பாதுகாப்பு பிரச்சனை தற்போதுள்ள கொவிட் - 19 பெருந்தொற்று மற்றும் காணி சுவீகரிப்பதிலுள்ள சிக்கல்கள் காரணமாக விபரமான வடிவமைப்பு வேலைகள் தாமதமடைந்திருந்தன. காணி சுவீகரிப்பு செயன்முறை தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றதுடன் பொதுமக்களின் கடுமையான எதிர்ப்பு மற்றும் உரிமையாளர்களின் மறுப்பு காரணமாக தாமதங்கள் காணப்படுகின்றன. | |
| (ஆ) கொள்கை மற்றும் நிறுவகரீதியான முன்னேற்ற மதியுரை (பிஐஈசீ) ஒப்பந்தத்தின் மதியுரையாளர்களால் ஒப்பந்தத்தின் கேள்வி ஆவணங்களை தயாரிப்பதிலுள்ள தாமதம் காரணமாக கழிவகற்றல் முகாமைத்துவ திறன் அபிவிருத்தி ஆலோசனை (எஸ்எம்எஸ்டிசீ) ஒப்பந்தம் 2020 | (ஆ)ஆரம்ப பெறுகை தாமதம் காரணமாக பிஐஈசீ ஒப்பந்தம் வழங்குவதில் ஏற்பட்ட தாமதம் எஸ்எம்எஸ்டிசீ இன் வேலைகளை ஆரம்பிப்பதில் ஏற்பட்ட தாமதத்திற்கு பங்களித்திருந்தது. | |

| | | |
|---|---|---|
| யூன் 30 வரையிலும் வழங்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) நீர்கொழும்பு கழிவு நீர் முகாமைத்துவ முறைமைக்கான பம்பி இல்லங்களுடன் கூடிய சேகரிப்பு முறைமையின் நிர்மாணம் மற்றும் நீர்கொழும்பிலுள்ள கழிவு நீர் சுத்திகரிப்பு பொறியின் வடிவமைப்பு மற்றும் நிர்மாணம் ஆகிய பெயர்களிலான ஏனைய இரண்டு ஒப்பந்தங்கள் செயற்திட்டக் காலப்பகுதியின் போது பூர்த்திசெய்யப்படுவதற்கு எதிர்பாாக்கப்பட்ட போதிலும் ஒப்பந்தங்கள் 2020 யூன் 30 வரையிலும் வழங்கப்பட்டிருக்கவில்லை. | (இ)வடிவமைப்பு மற்றும் மேற்பார்வை மதியுரை (டிஎஸ்சீ) ஒப்பந்தத்தின் பெறுகையில் தாமதம் காரணமாக ஆரம்ப தாமதம் ஏற்பட்டு அதற்கிணங்க வேலைகள் ஒப்பந்தங்கள் 2020 நவம்பர் மாதத்தில் ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்தது. 2020 ஆம் ஆண்டின் இறுதிக்கு முன்னர் கேள்வி ஆவணங்களை மதியுரையாளர் பூர்த்தி செய்ய வேண்டும். | |

(iv) <u>**3.7.4 குண்டசாலை ஹரகம நீர் வழங்கல் செயற்திட்டம்**</u>

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| (அ) செயற்திட்டம் தொடர்பான பெறுகை நடவடிக்கைகள் 2011 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் ஒப்பந்த உடன்படிக்கை மற்றும் நிதி உடன்படிக்கையை கைச்சாத்திடுவதற்கு முறையே நான்கு ஆண்டுகள் மற்றும் ஐந்து ஆண்டுகள் எடுத்திருந்தன. எனினும் ஒப்பந்ததாரரின் நிதி இயலாமை மற்றும் முற்பண பிணைமுறி மற்றும் செயலாற்றல் பிணைமுறியை சமர்ப்பிக்க தவறியமை காரணமாக ஒப்பந்தம் 2016 மார்ச்சில் முடிவுறுத்தப்பட்டிருந்தது. | (அ)நிதி இயலாமை காரணமாக ஒப்பந்ததாரர் நிறுத்தப்பட்டிருந்தார் | (i) முடிவுறுத்தப்பட்ட ஒப்பந்தத்திற்காக தாமதமின்றி புதிய ஒப்பந்தம் வழங்கப்பட வேண்டும்.<br>(ii) தேவையான போது ஒப்பந்த உடன்படிக்கையை கைச்சாத்திடுவதற்கு முன்னர் சட்டமா அதிபரின் இணக்கப்பாட்டை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேணடும். |
| (ஆ) ஒப்பந்தம் ஆரம்பத்தில் 2016 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருந்ததுடன் இது முடிவுறுத்தப்பட்டுள்ளது. எனினும் வினைத்திறனற்ற பெறுகை செயன்முறை காரணமாக 2019 யூனில் மீண்டும் புதிய ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கு இன்னொரு மூன்று ஆண்டுகள் எடுத்திருந்ததுடன் சட்டமா அதிபரின் இணக்கப்பாட்டை | (ஆ)நீண்ட தொழில்நுட்ப மற்றும் நிதி மதிப்பீடுகள் மற்றும் பேச்சுவார்த்தைகளின் பின்னர் 2019 மே 28 ஆம் திகதிய அமைச்சரவை அங்கீகாரத்துடன் 2019 யூன் 14 இல் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. பின்னர் ஒப்பந்த உடன்படிக்கை சட்டமா அதிபர் திணைக்கள இணக்கப்பாட்டிற்கு உட்பட்டு 2019 ஒக்தோபர் 14 இல் | |

| | | |
|---|---|---|
| பெற்றுக் கொள்ளாமல் இது வழங்கப்பட்டிருந்தது. | கைச்சாத்திடப்பட்டிருந்தது. | |
| (v) **3.7.5 <u>கொழும்பு பெரும்பாக நீர் புனரமைப்புச் செயற்திட்டம்</u>**<br><br>புதிய அலுவலக கட்டிட தொகுதியை நிர்மாணிப்பதன் மூலம் கொழும்பு மற்றும் கொட்டிகாவத்தை - முல்லேரியாவப் பகுதி நகரத்தில் நீர் வழங்கலை புனரமைத்து முன்னேற்றுதல் மற்றும் மாளிகாகந்தையில் புதிய நீர்த்தேக்கமொன்றையும், எலி ஹவுஸில் நீரத்தேக்கமொன்றையும் நிர்மாணித்தல், ஹெட்டியாவத்தை மற்றும் முல்லேரியாவில் நீர் வழங்கல் முறைமையை முன்னேற்றுதல் மற்றும் கொழும்பில் தெரிவு செய்யப்பட்ட குத்தகைதாரர் தோட்டங்களில் நீர் இணைப்பை வழங்குதல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும்.<br><br>இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.<br><br>(அ) செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2007 நவம்பர் 27 இல் தொடங்கியிருந்ததுடன் 2012 சனவரி அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது. பின்னர் செயற்திட்ட நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதில் தாமதங்கள் காரணமாக செயற்திட்ட காலப்பகுதி 2017 யூன் 20 வரை நீடிக்கப்பட்டிருந்தது. மேலும் மிகுதி நிர்மாண வேலைகளை பூர்த்தி செய்தமை தொடர்பான கிரயத்தை தீர்ப்பனவு செய்வதற்கு 2015 யூன் 20 இல் கடன் முடிவுறுத்தப்பட்ட பின்னர் 2015 இல் ஒப்பந்ததாரர் கணக்கொன்றிற்கு ரூபா 346.59 மில்லியன் தொகை மாற்றப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. எனினும் அது தொடர்பாக வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திடமிருந்து அங்கீகாரம் | (அ)வரிசை அமைச்சின் ஊடாக வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் ஊடாக செயற்திட்ட பணிப்பாளரால் இணக்கப்பாடு மற்றும் அங்கீகாரத்திற்காக யப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மைக்கு உரிய ஒப்பந்தங்களிற்கான திருத்தங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. ஜேஐசீஏ வெளிநாட்டு வளங்கள் திணைக்கத்தினூடாக இதற்கு இணங்கியிருந்தது.<br><br>நிபந்தனையற்ற வங்கி உத்தரவாதங்களை சமர்ப்பிப்பது தொடர்பாக வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ கணக்கிற்கு ஒப்பந்ததாரர்களிற்கு உரிய முற்பண நிதிகளை யப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மை மாற்றியிருந்தது. | (i) ஒப்பந்த காலப்பகுதியினுள் செயற்திட்டத்தை பூர்த்தி செய்யக்கூடியவாறு செயற்திட்ட வேலைகளை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.<br><br>(ii) அங்கீகரிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்களை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்<br><br>(iii) ஒப்பந்த உடன்படிக்கையிலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்குவதை உறுதிப்படுத்துதல்.<br><br>(iv) நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் செயற்திட்ட நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.<br><br>(v) செல்லுபடியான குத்தகை உடன்படிக்கை ஒன்றை அடிப்படையாகக் கொண்டு காணிகளிற்கான குத்தகை வாடகைகள் செலுத்தப்பட வேண்டும்.<br><br>(vi) குத்தகையிலாதன காணிகளிற்காக முறையான குத்தகை உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட வேண்டும். |

பெறப்பட்டிருக்கவில்லை.

| | | |
|---|---|---|
| (ஆ) | ஆரம்ப வேலைத்திட்டங்களில் உள்ளடக்கப்பட்டிருக்காத இரண்டு அலுவலகக் கட்டிடங்கள் கொலன்னாவ மற்றும் மாளிகாகந்தையில் ரூபா 180.41 மில்லியன் கிரயத்தில் செயற்திட்டத்தால் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் குத்தகை உடன்படிக்கை கைச்சாத்திடப்படாமல் 2018 திசெம்பர் 31 வரை கொலன்னாவ பிரதேச செயலாளரிற்கு ரூபா 5.17 மில்லியன் கூட்டுமொத்தமான குத்தகை வாடகைகள் செலுத்தப்பட்டிருந்தன. மேலும் 2015 ஆம் ஆண்டிலிருந்து கொழும்பு மாநகர சபையின் பதவியணியினர் பயன்படுத்துவதற்காக உரிய கட்டிடங்கள் அனுமதிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | (ஆ)கொலன்னாவ காணி குத்தகை உடன்படிக்கை கொலன்னாவ பிரதேச செயலாளரின் ஒருங்கிணைப்புடன் என்டபிள்யூஎஸ்டிபீ இன் காணிப் பிரிவால் செயன்முறைப்படுத்தப்படுகின்றது.<br><br>கொலன்னாவவிலுள்ள அலுவலகக் கட்டிடத்தின் நிர்மாணம் செயற்திட்டத்தின் ஆரம்ப வேலைத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. ஆனால் பின்னர் வேண்டுகோளின் அடிப்படையில் என்டபிள்யூஎஸ்டிபீ ஒப்பந்த உடன்படிக்கையை கைச்சாத்திட்டு வரிசை அமைச்சின் ஊடாக வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் ஊடாக ஜேஐசீஏ இன் இணக்கப்பாடு பெறப்பட்டிருந்தது.<br><br>2009 ஆம் ஆண்டிலிருந்து மாளிகாகந்தை காணிக்கான குத்தகை உடன்படிக்கை காணப்படுகின்றதுடன் குத்தகை உடன்படிக்கை நிபந்தனையின் பிரகாரம் எல்கேஆர் 151 மில்லியன் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. குத்தகை உடன்படிக்கை நிபந்தனையின் பிரகாரம் கட்டிடத்தின் பகுதி கொழும்பு மாநகர சபை பதவியணியினர் பயன்பாட்டிற்காக அனுமதிக்கப்பட்டிருந்தது. |
| (இ) | கொட்டிகாவத்தை மற்றும் முல்லேரியாவவில் நீர் வழங்கலை முன்னேற்றும் பொருட்டு ரூபா 258.10 மில்லியன் கிரயத்தில் அம்பேத்தலேயில் நீர் பம்பி (அளவீட்டு விலைப் பட்டியலில் கிரயம் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை) மற்றும் கொதடுவவில் நிலத்தடி | (இ)கொதடுவவில் பம்பி இல்லம் மற்றும் நிலத்தடி நீர்த் தொட்டி என்பவற்றை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் மாறுபடும் வேக இயக்கிகளின் புதிய தொழில்நுட்ப ஒழுங்குபடுத்தினால் நிலத்தடி நீர்த் தொட்டி மற்றும் பம்பி இல்லத்தின் நிர்மாணக் கிரயத்தை எங்களால் சேமிக்க |

| | | | |
|---|---|---|---|
| | நீர்த்தேக்கம் என்பவற்றை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | முடிந்திருந்தது. | |
| (vi) | **3.7.6 <u>கண்டி நகர கழிவுநீர் முகாமைத்துவ செயற்திட்டம்</u>**<br><br>சனத்தொகை அதிகமாகவுள்ள பகுதிகளில் சுகாதார வசதிகளின் புனரமைப்பு உள்ளடங்கலாக கண்டி நகரத்தில் கழிவு நீர் சேகரித்தல், சுத்திகரித்தல் மற்றும் அகற்றுதல் என்பவற்றிற்காக நேர்த்தியான முறைமையொன்றை நிர்மாணிப்பதன் மூலம் சிறந்த சுகாதார வசதிகள் ஊடாக வாழ்க்கைச் சூழல் மற்றும் மகாவலி ஆற்றின் தண்ணீர் தரத்தினை முன்னேற்றி அதன் மூலம் அப்பகுதியிலுள்ள மக்களின் வாழ்க்கைத்தரம், சகாதாரம் மற்றும் சுகதேகி நிலையை உயர்த்துதல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும்.<br><br>இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.<br><br>(அ) செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2010 பெப்ரவரி 03 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2017 செப்தெம்பர் அளவில் பூர்த்திசெய்யப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது. பின்னர் செயற்திட்ட காலப்பகுதி 2022 திசெம்பர் 31 வரை நீடிப்புச் செய்யப்பட்டிருந்தது. | பின்வருவன காரணமாக 2017 யூன் தொடக்கம் 2021 யூலை வரை 1,470 நாட்களால் செயற்திட்டம் தாமதமடைந்திருந்தது.<br><br>• பெறுகை செயன்முறையிலுள்ள தாமதங்கள்<br>• வடிவமைப்பு, மூலப்பொருள் விநியோகம் மற்றும் நிர்மாணங்களிலுள்ள ஒப்பந்ததாரரின் தாமதங்கள்<br>• வடிவமைப்புக்களில் திருத்தங்கள் காரணமாக தாமதங்கள்<br>• பல்வேறு நிறுவனங்களின் தலையீடுகள் மற்றும் எதிர்பாராத காரணங்களினால் தாமதங்கள்<br>• குறிப்பாக சாதகமற்ற | (i) ஒப்பந்த காலப்பகுதியினுள் செயற்திட்டத்தை பூர்த்தி செய்யக்கூடியவாறு செயற்திட்ட வேலைகளை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.<br>(ii) ஒப்பந்த உடன்படிக்கையிலுள்ள ஏற்பாடுகளுடன் கண்டிப்பாக இணங்குவதை உறுதிப்படுத்துதல்.<br>(iii) நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் செயற்திட்ட நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.<br>(iv) நிர்மாணங்களை ஆரம்பிப்பதற்கு முன்னர் முன்மொழியப்பட்ட காணிகள் சுவீகரிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | காலநிலை நிலைமைகள் போன்றவற்றால் ஏற்படும் தாமதங்கள் | |
| (ஆ) குறைந்த வருமான குழுக்களிற்கு சுகாதார வசதிகளை வழங்குவது தொடர்பான ஒப்பந்தம் 2018 மார்ச் 21 இல் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் குறைபாட்டு பொறுப்புக் காலப்பகுதி 2019 மார்ச் 21 இல் முடிவடைந்திருந்தது. எனினும் ஒப்பந்ததாரர் 2019 ஆகஸ்ட் 30 வரையிலும் செயற்திட்டத்தால் சுட்டிக்காட்டப்பட்ட திருத்த வேலைகளை மேற்கொண்டிருக்கவில்லை. | (ஆ)குறைபாடுகள் தெரியப்படுத்தல் காலப்பகுதி நீடிக்கப்பட்டிருந்த போதிலும் குறைபாடுகள் ஒப்பந்ததாரரால் மேற்கொள்ளப்பட முடியாதிருந்தன. ஆகையால் அனைத்துக் குறைபாடுகள் மற்றும் உத்தரவாதங்களை மேவுகை செய்வதற்கு ரூபா 1,881,655 தொகைக்கான மதிப்பீடொன்றை கண்டி மாநகர சபையால் எடுக்கப்பட்டிருந்தது. ரூபா 5,095,377.76 பெறுமதியான ஒப்பந்ததாரரின் செயலாற்றல் பிணைமுறி காசாக்கப்பட்டு கண்டி மாநகர சபைக்கு மதிப்பிடப்பட்ட தொகை செலுத்தப்பட்டிருந்தது. | |
| (இ) தியன்னவெல, கண்டியிலுள்ள அலோக வைத்தியசாலை மற்றும் மஹாநாம ஆரம்ப பாடசாலை வளாகங்களில் உரிய காணிகளின் உரித்துறுதியை உரிமை மாற்றம் செய்து பெற்றுக்கொள்ளாமல் பம்பி இல்லத்தின் நிர்மாணத்தை செயற்திட்டம் ஆரம்பித்திருந்தது. | (இ)காணி விடயங்களை தீர்ப்பதற்கு அதிக காலம் எடுக்கின்றது. | |

(vii) **3.7.7** **<u>கிரிந்த நீர் வழங்கல் செயற்திட்டம்</u>**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| (அ) தொம்பே பிரதேச செயலக பிரிவிலுள்ள 20,000 மக்களிற்கு குடிநீரை வழங்கும் பொருட்டு செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2019 பெப்ரவரி 15 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2020 பெப்ரவரி 14 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. எனினும் ஒப்பந்ததாரரின் மோசமான செயலாற்றல் மற்றும் தேவையான ஊழியர் மற்றும் | (அ)ஒப்பந்தம் தற்போது 2020 நவம்பர் 04 வரை கால நீடிப்புச் செய்யப்பட்டுள்ளதுடன் ஒப்பந்ததாரரிற்கு செயன்முன்னேற்றத்தை மேம்படுத்துவதற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் சில காரணங்களினால் செயன்முன்னேற்றம் தற்போதும் 32 சதவீதத்தில் குறைவாகவே உள்ளது. | (i) ஒப்பந்த காலப்பகுதியினுள் செயற்திட்டத்தை பூர்த்தி செய்யக்கூடியவாறு செயற்திட்ட வேலைகளை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.<br>(ii) கால நீடிப்புக்களை வழங்குவதற்குப் |

| | | |
|---|---|---|
| உபகரணத்தை வேலையில் ஈடுபடுத்த இயலாதமை காரணமாக செயற்திட்டக் காலப்பகுதி 2020 ஆகஸ்ட் 14 வரை நீடிக்கப்பட்டிருந்தது. எனினும் 2020 யூலை 31 இல் உள்ளவாறான பௌதீக செயலாற்றல் 31 சதவீதம் மாத்திமேயாகும். | | பதிலாக ஒப்பந்த நிபந்தனைகளின் பிரகாரம் மோசமாக செயலாற்றும் ஒப்பந்ததாரர்களிற்கான தாமதக் கட்டணங்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) வினைத்திறனற்ற பெறுகை செயன்முறை காரணமாக கேள்விதாரரிடமிருந்து ஆர்வத்தை வெளிப்படுத்தலை கோருவதற்கும் தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரருக்கு ஒப்பந்தத்தை வழங்குவதற்கும் ஏறத்தாழ நான்கு (04) ஆண்டுகள் எடுத்திருந்தது. மேலும் 2014 பெப்ரவரியில் ஆர்வத்தை வெளிப்படுத்தலை கோரிய போது ரூபா 585.95 மில்லியன் பொறியியல் மதிப்பீடானது கேள்வியை மீளக் கோரும் நேரத்தில் எந்தவொரு நியாயமான காரணமுமின்றி ரூபா 875.3 மில்லியன் வரை அதிகரிக்கப்பட்டிருந்தது. | (ஆ)வேலையின் நோக்கெல்லை மற்றும் வளமூலத்தில் மாற்றங்கள் காரணமாக பெறுகை செயன்முறை தாமதமடைந்திருந்தது. | (iii) செயற்திட்ட நோக்கங்களை உரிய நேரத்தில் அடைந்துகொள்ளும் பொருட்டு பெறுகை செயன்முறையை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.<br>(iv) உரிய காலப்பகுதியினுள் செயற்திட்டத்தை பூர்த்தி செய்யும் பொருட்டு சாத்தியமானளவு விரைவாக ஏனைய நிறுவனங்களிடமிருந்து தேவையான அனுமதிகளை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரரிற்கு பொறியியல் மதிப்பீட்டை விட 29.71 சதவீதம் குறைவாகவுள்ள ரூபா 513.28 மில்லியன் ஒப்பந்த தொகைக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. அரசாங்க பெறுகை வழிகாட்டலின் 7.9.11(அ) பிரிவின் பிரகாரம் குறிப்பிடப்பட்ட விலைவீதங்களின் பிரகாரம் அத்தகைய பொருட்கள், வேலைகள் மற்றும் சேவைகளை கேள்விதாரர் எவ்வாறு கொள்வனவு செய்ய விரும்புகின்றார் என்பது தொடர்பான ரீஈசீயின் திருப்தி தன்மையை நிரூபிப்பதற்கு ஒப்பந்ததாரரிடமிருந்து விலைவிகித பகுப்பாய்வு எதுவும் பெறப்பட்டிருக்கவில்லை. | (இ)குறித்துக் கொள்ளப்பட்டது. | (v) அரசாங்க பெறுகை வழிகாட்டி, எவ்ஐடிஐசீ வழிகாட்டல்கள் மற்றும் ஒப்பந்த நிபந்தனைகளுடன் கண்டிப்பாக இணங்குவதை உறுதிப்படுத்துதல்.<br>(vi) ஒப்பந்தத்தை வழங்குவதற்கு முன்னர் மதிப்பீட்டிற்கான அளவுகோலாக ஒப்பந்ததாரரின் கடந்தகால செயலாற்றல் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) களத்துவவ நீர் வழங்கல் திட்டத்திலிருந்து நீர் வழங்கலை பெற்றுக்கொள்வதற்கு குழாய் புள்ளியாக ஹன்னுவெல்ல பாலம் இனங்காணப்பட்டிருந்த போதிலும் பாலத்தினூடாக குழாயிடுவதற்கு 2020 சனவரி 16 வரையிலும் வீதி | (ஈ)இவ் விடயம் 2020 செப்தெம்பர் 08 இல் பணிப்பாளர்/ பொறியியல் சேவைகள் - ஆர்டிஏ உடன் கலந்துரையாடப்பட்டிருந்ததுடன் கொவிட் - 19 நிலைமை மற்றும் காலத்திற்கு காலம் ஆற்றின் தண்ணீர் மட்டம் | |

| | | |
|---|---|---|
| | அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | மாற்றமடைதல் காரணமாக SD&CC ஆல் மேற்கொள்ளப்பட்ட பால திருத்தம் தாமதமடைந்திருந்தது என அவர் அறிவித்திருந்ததுடன் வேலை தற்போதும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | சபையானது ஒப்பந்ததாரரிற்கு ரூபா 74.43 மில்லியன் முற்பணத்தை செலுத்தியிருந்த போதிலும் ரூபா 7,736,256 பெறுமதியான 3996 மீற்றர் 160mm dia குழாய்களை கடன் அடிப்படையில் அவரிற்கு வழங்கியிருந்தது. எனினும் 2020 சனவரி 16 வரையிலும் குழாய்களின் பெறுமதியான ரூபா 4,832,256 தொகையை தீர்ப்பனவு செய்வதற்கு ஒப்பந்ததாரர் தவறியிருந்தார். | (உ) வேலை ஆரம்பிப்பு முற்பணங்களை பயன்படுத்தி குழாய்களை கொள்வனவு செய்வதற்கு மேலும் சில மாதங்கள் எடுக்கும் என்பதால் அவசரமாக வேலைகளை ஆரம்பிப்பதற்கு கடன் அடிப்படையில் சில குழாய்கள் மற்றும் ஏனைய மூலப்பொருட்களை ஒப்பந்ததாரர் கோரியிருந்ததுடன் இவை பொது முகாமையாளரின் அங்கீகாரத்துடன் ஒப்பந்ததாரரிற்கு வழங்கப்பட்டிருந்தன. |
| (ஊ) | மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது தெரிவுசெய்யப்பட்ட ஒப்பந்ததாரரிற்கு ஒபபந்தத்தை வழங்கும் நேரத்தில் அவரிற்கு வழங்கப்பட்ட பொலன்னறுவை மாவட்டத்தில் பிவிதெமு பொலன்னறுவை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் குழாய்களை வழங்கிப் பொருத்துதலிற்கான ஒப்பந்தம் மற்றும் மிதிரிகிரிய நீர் வழங்கல் செயற்திட்டம் - கட்டம் (iii) இற்கான 9000m$^3$ இயலளவுடைய நீர் சுத்திகரிப்பு பொறியின் நிர்மாணத்திற்கான ஒப்பநந்தம் ஆகிய ஏனைய இரண்டு ஒப்பந்தங்களையும் இணங்கப்பட்ட காலப்பகுதியினுள் பூர்த்தி செய்ய தவறியிருந்தமை அவதானிக்கப்பட்டது. எனினும் அதே ஒப்பந்ததாரரிற்கு இவ் ஒப்பந்தத்தை வழங்கும் போது இவை கருத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | (ஊ) பின்னரான மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு ஒப்பந்ததாரரை தகுதிநீக்கம் செய்வது ஒப்பந்ததாரரால் சவாலாக எடுத்துக்கொள்ளப்படும் என்பதால் என்டபிள்யூஎஸ்டிபீ இற்கெதிராக சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு இது வழிவகுக்கலாம். |

(viii) **3.7.8 <u>கொழும்பு மாவட்ட கிழக்கு நகர நீர் வழங்கல் செயற்திட்டம் - பொதி 01 மற்றும் 03</u>**

பாதுக்க, சீதாவக்க, ஹொரண மற்றும் ஹோமாகம பிரதேச செயலக பிரிவில் 176 Km இனை மேவுகை செய்து பிரதான விநியோகத்தை குழாயிடுதல் மற்றும் 4 Km பிரதான பரிமாற்றத்தை

(i) ஒப்பந்த உடன்படிக்கையிலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்குவதை உறுதிப்படுத்துதல்.

(ii) ஒப்பந்த காலப்பகுதியினுள் செயற்திட்டத்தை

குழாயிடுதல் என்பவற்றின் மூலம் நீர் வழங்கலை மேற்கொள்ளும் பொருட்டு செயற்திட்டம் தொடங்கப்பட்டிருந்தது.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்தின் அளவீட்டு விலைப் பட்டியலிற்கு (பீஓகியூ) முரணாக பின் நிப்புதல் நோக்கங்களிற்காக அகழப்பட்ட மண்ணின் பயன்பாடு காரணமாக 267,188 மீற்றர்களிற்கு மேற்படி செயற்திட்டத்தின் பொதி 1 மற்றும் 3 இல் பிரதேச சபை வீதியின் வீதி ஓரங்களின் தற்காலிக வீதி சீரமைப்பிற்காக ரூபா 732.07 மில்லியன் மேலதிகக் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது.

(அ)தற்காலிக சீரமைப்பிற்காக இறக்குமதி செய்யப்பட்ட மண்ணை பயன்படுத்துவது கட்டாயமானதாக இருக்கவில்லை. ஒப்பந்தத்தின் பிரகாரம் தற்காலிக சீரமைப்பு அகழப்பட்ட மண்ணை பயன்படுத்தியோ அல்லது இறக்குமதி செய்யப்பட்ட மண்ணை பயன்படுத்தியோ மேற்கொள்ளப்பட முடிந்திருந்தது. இறக்குமதி செய்யப்பட்ட மண்ணை பயன்படுத்துவது கட்டாயமானதாக இருக்கவில்லை.

(ஆ) 2018 ஆம் ஆண்டின் போது நிலவிய தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் விலைவீதங்களுடன் ஒப்பீடும் போது பொதி (iii) இற்காக இறக்குமதி செய்யப்பட்ட 10,000 நீர் மானிகளிற்காக ரூபா 79.79 மில்லியன் மேலதிகக் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ)ரீஈசீ ஆல் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடு மற்றும் எஸ்சீஏபிசீ இன் பரிந்துரையுடன் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. அமுல்ப்படுத்தலின் போது நீர் மானிகளிற்கான பிஓகியூ விலைவீதங்களை திருத்தம் செய்வதற்கான அதிகாரத்தை செயற்திட்டப் பதவியணியினர் கொண்டிருக்கவில்லை.

(இ) நீர் மானியின் பகுதியொன்றாக brass unions வழங்கப்படுகின்ற போதிலும் இது அளவீட்டு பட்டியலில் தனியாக உள்ளடக்கப்பட்டிருந்ததனால் பொதி (i) மற்றும் (iii) இற்காக brass unions இனை வழங்குவதற்காக ரூபா 25.32 மில்லியன் தனியான கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(இ)நீர் மானிகள் மற்றும் Brass unions என்பவற்றை தனித்தனி விடயங்களாக பிஓகியூ வழங்குகின்றது. brass unions உடன் சேர்த்து நீர் மானிகளை கொள்வனவு செய்யும் போது தனியான அலகொன்றாக நீர் மானிகள் மற்றும் இணைப்பு பாகங்களை உள்ளடக்குவதற்கு விபரமாக விநியோக பொருட்கள் வழங்கப்படுகின்றமை என்டபிள்யூஎஸ்டிபீ இலுள்ள வழமையான நடைமுறை ஒன்றாகும்.

பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

(iii) செயற்திட்டத்தின் மதிப்பீட்டுக் கட்டங்களில் ஒப்பந்ததாரர்களிற்கு அசாதாரண விலைவிகிதம் செலுத்தப்படுவதனை தவிர்த்தல்.

எனினும் பொதி 01 மற்றும் பொதி 03 இன் பீஓகியூக்களின் விடயத்தில் விபரம் வழங்கப்பட்டிருக்காததுடன் நீர் மானிகள் மற்றும் brass unions தனித்தனி உருப்படிகளாக வழங்கப்பட்டிருந்தன.

அதற்கிணங்க பீஓகியூ இல் வழங்கப்பட்ட அளவுகளின் பிரகாரம் சேவை இணைப்பு மூலப்பொருட்களின் வழங்கலிற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன் இரண்டு ஒப்பந்தங்களிலும் உள்ள வெவ்வேறு IPC s ஊடாக நீர் மானிகள் மற்றும் brass unions என்பவற்றிற்காக தனித்தனியாக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### 3.8 ஏனைய நிறுவனங்களிற்கு விடுவிக்கப்பட்ட வளங்கள்

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றிக்கையின் 8.3.9 ஆம் பிரிவின் ஏற்பாடுகளிற்கு முரணாக, பத்தொன்பது (19) ஊழியர்கள் 2019 திசெம்பர் 31 அளவில் வரிசை அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் சபையானது அவர்களில் 18 ஊழியர்கள் சார்பில் ஆண்டின் போது ரூபா 22,025,414 தொகையை செலுத்தியிருந்தது. அதற்கிணங்க 2015 திசெம்பர் தொடக்கம் 2019 திசெம்பர் 31 வரை சபையிலிருந்து விடுவிக்கப்பட்ட ஊழியர்களிற்காக நீர் வழங்கல் அமைச்சால் ரூபா 168,449,077 தொகை மீளளிக்கப்பட வேண்டியுள்ளது. | அவசர தொழில்நுட்ப மற்றும் ஏனைய தொழிற்பாடுகளிற்காக பதவியணியினரை விடுவிப்பதற்கு அமைச்சு செயலாளரால் கோரிக்கைகள் மேற்கொள்ளப்படும் போது அவர்கள் தற்காலிக அடிப்படையில் அமைச்சிற்கு விடுவிக்கப்படுகின்றனர். எனினும் குறித்த சம்பளங்களை மீள்நிரப்புச் செய்வதற்கு தேவையான பாதீட்டு ஏற்பாடுகளை அவர்கள் கொண்டிருக்கவில்லை என அமைச்சு அறிவித்திருந்தது. | ஏனைய நீறுவனங்களிற்கு வளங்களை விடுவிப்பது தொடர்பாக 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றிக்கையுடன் இணங்குவதை உறுதிப்படுத்துதல். |
| (ii) | மேலும் ஏழு (07) மோட்டார் வாகனங்கள் 2019 சனவரி தொடக்கம் நவம்பர் வரையான காலப்பகுதியின் போது வரிசை அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அவ் வாகனங்களின் திருத்தங்கள், அனுமதிப்பத்திரம் மற்றும் காப்புறுதிக்காக ரூபா 379,125 | 2019.12.31 இல் உள்ளவாறு அமைச்சிற்கு மூன்று வாகனங்கள் மாத்திரம் விடுவிக்கப்பட்டுள்ளது. | ஏனைய நீறுவனங்களிற்கு வளங்களை விடுவிப்பது தொடர்பாக 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி.∴12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றிக்கையுடன் இணங்குவதை |

| | | |
|---|---|---|
| தொகை செலிடப்பட்டிருந்தது. | | உறுதிப்படுத்துதல். |

### 3.9 மனித வளங்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | சபையானது மேலதிக முகாமையாளர் (கூட்டுறவு சேவை) மற்றும் பிரதிப் பொது முகாமையாளர்கள் போன்ற தந்திரோபாய மட்ட பதவிகள், முகாமையாளர், பொறியியலாளர் (இயந்திரவியல்), பொறியியலாளர் (மின்னியல்), பொறியியலாளர் (சிவில்), நடுத்தர மட்ட தொழில்நுட்பம் (எம்எல்-ரீ), எழுதுனர் மற்றும் இணைந்த வகைப்படுத்தல்கள் மற்றும் ஏனைய திறன் தரங்கள் போன்ற பிரதான செயற்பாட்டு மட்ட பதவிகள் உள்ளடங்கலாக 969 வெற்றிடங்களை நிரப்புவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. | சில வேலைகளின் தன்னியக்கம், மனித சக்தி ஒப்பந்தங்களின் கீழ் ஊழியர்கள் வாடகைக்கு அமர்த்தப்படுகின்றமை, தடை உத்தரவுகள், கிரய கட்டுப்பாட்டு பொறிமுறையொன்றாக மற்றும் தற்போதுள்ள பதவியணியினரின் வினைத்திறனான பயன்பாடு என்பன காரணமாக வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிருக்கவில்லை. | சபைக்கு போதுமான பதவியணியினரை ஆட்சேர்ப்புச் செய்தல். |
| (ii) | 2006 செப்தெம்பர் 22 ஆம் திகதிய 30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டவாறு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வுத் திட்டத்திற்கான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வு செய்வதற்கு குழுவொன்று நியமனம் செய்யப்பட்டுள்ளதுடன் நடவடிக்கை தற்போதும் செயன்முன்னேற்றத்தில் உள்ளது. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து எஸ்ஓஆர் இற்கான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | மொனராகலை, மாத்தறை முகாமையாளர் அலுவலகங்கள் மற்றும் பிராந்திய ஆதார நிலையம் (தெற்கு) ஆகியவற்றில் தொழிலாளர்களாக வெளி நிறுவனங்களிலிருந்து வேலையில் ஈடுபடுத்தப்பட்ட எழுபது (70) ஊழியர்கள் மானி வாசிப்பாளர்கள், பம்பி இயக்குநர்கள், எழுதுநர் போன்றவர்களாக பணிக்கமர்த்தப்பட்டிருந்தனர். | அத்தியாவசிய பணிகள் காரணமாக அவர்கள் குறித்த நிறுவனங்களிடமிருந்து வேலையில் ஈடுபடுத்தப்படுகின்றனர். | சபையில் பொறுப்பான பதவிகளிற்கு சேவை ஒப்பந்த உடன்படிக்கைகளின் கீழ் வாடகைக்கமர்த்தப்பட்ட ஊழியர்களை நியமனம் செய்வதை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iv) | மீளாய்வாண்டின் இறுதியில் ஒப்பந்த அடிப்படையில் சமூகவியலாளர், சிவில் பொறியியல் உதவியாளர் மற்றும் பொறி இயக்குநர் ஆகியோர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தனர். | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரினுள் அத்தகைய ஆட்சேர்ப்புக்கள் நிறைவேற்றப்பட முடிந்திருந்தன. | உயர் மற்றும் முகாமைத்துவ மட்ட பதவிநிலைகள் நிரந்தர பதவியணியுடன் நிரப்பப்பட வேண்டும். |
| (v) | கடந்த ஐந்து ஆண்டுகளிற்கான ஊழியர் ஒருவரிற்கான மொத்தக் கிரயம் பின்வருமாறு | குறித்துக் கொள்ளப்பட்டது. | இயலுமானவரை பதவியணி கிரயத்தை |

| உள்ளது. | | | | கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுககப்பட வேண்டும். |
|---|---|---|---|---|
| **ஆண்டு** | **மொத்த ஊழியர் எண்ணிக்கை** | **மொத்த ஊழியர் கிரயம் ரூபா மில்லியன்** | **ஊழியர் ஒருவரிற்கான கிரயம் ரூபா மில்லியன்** | |
| 2015 | 10245 | 10,684.59 | 1.04 | |
| 2016 | 10352 | 11,412.87 | 1.10 | |
| 2017 | 10338 | 11,575.10 | 1.12 | |
| 2018 | 10022 | 12,863.07 | 1.28 | |
| 2019 | 10104 | 12862.19 | 1.27 | |

அதன் பிரகாரம் 2015 தொடக்கம் 2018 வரையான காலப்பகுதியின் போது ஊழியர் ஒருவரிற்கான கிரயம் படிப்படியாக அதிகரித்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | பிரதி பொது முகாமையாளர், உதவி பொது முகாமையாளர், ஐந்து (5) பிரதம உள்ளக கணககாய்வாளர்கள் மற்றும் ஒரு பொறியியலாளர் உள்ளடங்கலாக உள்ளக கணக்காய்வு பிரிவில் பதின்னான்கு (14) வெற்றிடங்கள் காணப்படுகின்றன. எனினும் 2020 யூலை 31 வரையிலும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிரதம உள்ளக கணக்காய்வாளர்களின் ஆட்சேர்ப்பு நடைபெற்றுக்கொண்டிருக்கும் சட்ட வழக்கு காரணமாக நிலுவையாகவுள்ளது. ஏனைய இரண்டு பிரதி பொது முகாமையாளர் மற்றும் உதவி பொது முகாமையாளர் பதவிகள் காலக்கிரமத்தில் ஆட்சேர்ப்பு செய்யப்படும். | பிரதி பொது முகாமையாளர் மற்றும் உதவி பொது முகாமையாளர் போன்ற விசேடமாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட வேண்டிய முக்கிய பதவிகளிற்கு போதியளவு உள்ளகக் கணக்காய்வு பதவியணியினர் தாமதமின்றி பொருத்தமான தகுதிவாய்ந்த உத்தியோகத்தர்களுடன் நிரப்பப்பட வேண்டும். |
| (ii) | உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதிகளை பயன்படுத்தி பெரிய எண்ணிக்கையிலான நீர் வழங்கல் மற்றும் சுகாதார சேவை செயற்திட்டங்கள் சபையால் மேற்கொள்ளப்படுகின்ற | இப் பிரிவை காலக்கிரமத்தில் மீளக்கட்டமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | போதியளவு எண்ணிக்கையான கணக்காய்வு பதவியணியினர் சபையின் தொழில்நுட்ப கணக்காய்வு பிரிவிற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| போதிலும் போதியளவு எண்ணிக்கையான பதவியணியினர் சபையின் தொழில்நுட்ப கணக்காய்வு பிரிவிற்கு இணைப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (iii) வெளிநாட்டு நிதியீட்டம் மூலம் நிதியளிக்கப்படுகின்ற அபிவிருத்தி செயற்திட்டங்களிற்கு உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் மாத்திரமே நியமனம் செய்யப்பட்டிருந்தார். | உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களை கணக்காய்வு செய்வதற்கு தற்போது ஒதுக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய பதவியணியினர் சுழற்சி அடிப்படையில் ஒதுக்கப்படுகின்றனர். 2016.06.10 ஆம் திகதிய 02/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கையின் பிரகாரம் வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களிற்காக உள்ளகக் கணக்காய்வாளர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து அங்கீகாரத்தை என்டபிள்யூஎஸ்டிபீ கோரியிருந்தது. முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் மேற்குறிப்பிட்டவற்றிற்கு நாளதுவரை அங்கீகாரத்தை வழங்கியிருக்கவில்லை. | முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கையுடன் இணங்குவதை உறுதிப்படுத்துதல். |

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான சபையின் ஏனைய செயற்பாட்டு செலவினங்கள், நிதிக் கிரயம் மற்றும் நிதி வருமானம் தொடர்பாக பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவினம் மற்றும் வருமானம் என்பவற்றிற்கிடையே 14 சதவீதம் தொடக்கம் 9325 சதவீதம் வரையிலான வீச்சில் குறிப்பிடத்தக்களவு முரண்கள் அவதானிக்கப்பட்டமையானது | 2019 ஆம் ஆண்டிற்கான பாதீடு ரூபா 2,428,963,000 நட்டத்திற்கு தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் உள்ளபடியான நட்டம் ரூபா 1,176,834,646 ஆகக் காணப்பட்டது. | குறிப்பிடத்தக்களவு முரண்களை குறைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது.

### 4.3 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான நிகழ்ச்சிநிரல் - 2030 பற்றி அறிந்துகொண்டதும் 2030 ஆம் ஆண்டளவில் அனைவரிற்கும் பாதுகாப்பானதும் மலிவானதுமான குடிநீருக்கான உலகளாவிய மற்றும் சமமான அணுகலை அடைந்துகொள்ளுதல் மற்றும் அனைவரிற்குமான போதுமானதும் சமமானதுமான சுகாதாரம் மற்றும் துப்பரவிற்கான அணுகலை அடைந்துகொள்ளுதல் மற்றும் மகளிர் மற்றும் பெண்கள் மற்றும் பாதிப்படையக்கூடிய நிலைமையில் உள்ளவர்களின் தேவைகளிற்கு விசேட கவனம் செலுத்தி திறந்த மலங்கழித்தலை முடிவுக்கு கொண்டுவருதல் போன்ற நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை சபை இனங்கண்டிருந்தது. எவ்வாறாயினும், அதன் நோக்கெல்லையின் கீழ் வருகின்ற வேறு குறிக்கோள்கள், இலக்குகள், புள்ளிவிபர தரவுகள், அவற்றிற்காக தொடர்புடைய இலக்குகளை அடைந்துகொள்வதிலும் செயலாற்றலை மதிப்பீடு செய்வதிலும் உள்ள மைல்கற்கள் என்பவற்றினை இனங்காண்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 2019 ஆம் ஆண்டு இறுதி வரையிலும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அமுல்ப்படுத்துவது தொடர்பாக | எதிர்கால செயற்பாட்டு மற்றும் அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் உரிய பாதீடுகளிற்கு அவற்றில் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடைந்துகொள்வதற்காக உரிய நடவடிக்கைகளை உள்ளடக்குவதற்கு 2019.07.02 ஆம் திகதிய இது தொடர்பான நீர் வழங்கல் அமைச்சு சுற்றறிக்கை 2019.07.12 இல் அனைத்து மேலதிக பொது முகாமையாளர்களிற்கும் அனுப்பப்பட்டிருந்தது.<br><br>2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது இந்நோக்கத்திற்கான தரவு சேகரிப்பிற்காக வினாக்கொத்தை உருவாக்குவது தொடர்பாக தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்துடன் அமைச்சின் தலைமைத்துவத்தின் கீழ் பல கலந்துரையாடல்களை என்டபிள்யூஎஸ்டிபீ நடாத்தியிருந்தது. | (i) எஸ்டிஜீயின் நோக்கெல்லையின் கீழ் வருகின்ற வேறு குறிக்கோள்கள், இலக்குகள், புள்ளிவிபர தரவுகள், அவற்றிற்காக தொடர்புடைய இலக்குகளை அடைந்துகொள்வதிலும் செயலாற்றலை மதிப்பீடு செய்வதிலும் உள்ள மைல்கற்கள் என்பவற்றினை இனங்காண்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.<br><br>(ii) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அமுல்ப்படுத்துவது தொடர்பாக உள்ளக சுற்றறிக்கைகள் அல்லது வழிகாட்டல்களை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.<br><br>(iii) சபைக்குரிய குறிகாட்டிகள் தொடர்பில் அனைத்து தரப்பினர்களையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற தரவுகளை பிரிப்பதற்கு நடைமுறையொன்றை பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

சபையால் உள்ளக சுற்றறிக்கைகள் அல்லது வழிகாட்டல்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

இதற்கு மேலதிகமாக 2020 மார்ச் 31 வரையிலும் சபைக்குரிய குறிகாட்டிகள் தொடர்பில் அனைத்து தரப்பினர்களையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற தரவுகளை பிரிப்பதற்கு எந்த நடைமுறையும் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.